ACL-TNAL
03463
2500

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி	ரௌத்திரி௵ புரட்டாசி—ஐப்பசி௴	பகுதி
11	1920௵ செப்டம்பர்—அக்டோபர்௴	5, 6

தற்கால நிலைமை.

பிஷப் லெட்பீட்டரவர்கள் சென்ற சில மாதங்களுக்குள் இரண்டு அரிய புஸ்தகங்களை வெளியிட்டிருக்கின்றனர். "மோனாட்" என்றது முதற் புத்தகம். இது மிகவும் உத்கிரந்தம். பரமாத்மாவாகிய பெருஞ்சுடரின் பொறிகளாகவும் உண்மையான "நாமா" கவும் இருக்கிறதும் நாம் என்று மித்தையாக எண்ணமிட்டலையும் நமது பற்பல கோசங்களுக்கு எல்லாம் பிரத்தியக்ஷமாக விளங்கும் சச்சிதானந்தஸ்வரூபியாகிய யாதொரு சைதந்யமுள்ளதோ அதையே இப்புத்தகமானது கூறுகிறது. சர்மசக்ஷுக்களாகிய நாம் நமது ஊனக்கண்களால் கண்டறியக் கூடாதவைகளை யெல்லாம் தமது திருந்திய ஞானக்கண்ணால் [illegible] உள்ளபடி கூறவல்ல சாமர்த்தியத்தைப் [illegible] மிகவும் தேர்ந்தவர் ஸ்ரீமான் லெட்-

பீட்டர் அவர்கள். அவ்விதமான திருஷ்டியுள்ளவர்கள் கூட தம்முடைய நாட்டத்தை அந்தர்முகமாகத் திருப்பிப் பார்த்தாலும், புவர், சுவர், லோகங்களில உள்ள தத்துவங்களை நன்றாக அறிய முடியும். அவைகளுக்கும் அப்பால், மகர் ஜனோ லோகங்களிலும், தபலோகம் சத்யலோகம் ஆகிய லோகங்களிலும் தென்படும் தத்துவங்களை உள்ளபடி சரியாய் அறிவதானால் மிகவும் மிகுந்த யோகசக்திகள் அவசியம். அப்படி அறிந்ததை ஸ்தூல உலகத்தில் மட்டும் விழிப்புள்ள எம்போலியர் அறியும் வண்ணம் எடுத்துக் கூறுவது மிகவும் சிரம சாத்தியமான காரியம். ஆனால் இவ்வுயர் விஷயத்தை உள்ளபடி பார்த்துப் பிழையற மிகையும் குறையுமின்றித் திருத்தமாய்க் கூறுவது என்ற சாமர்த்தியமானது ஸ்ரீமான் லெட் பீட்டரை விட மற்றவர்களுக்கு அவ்வளவு சாத்தியமாகாது. ஆகையால் இப்பெரியவர் இவ்வுயர் விஷயத்தைப்பற்றி எழுதியுள்ள புத்தகமானது ஆங்கில உலகத்திற்கே மிகவும் உபகாரம் புரிவதாகும்.

“கிறிஸ்தவ ஸம்ஸ்காரங்களின் தத்துவம்” என்று மற்றொரு புத்தகத்தை இப்பெரியவரே வெளியிட்டுள்ளார். அதுவும் மிகவும் அரிய புஸ்தகம். ஹிந்துக்களுக்குள் எப்படி பற்பல ஸம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளனவோ அம்மாதிரியே, கிறிஸ்தவர்களுக்குள்ளும் அதைப் போன்ற ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் அம்மதத்தை உலகில் ஸ்தாபித்தவரான ஏசுகிறிஸ்துவால் மிகவும் வீர்ய முடையவைகளாய் உலகத்திற்கே நன்மை உண்டு பண்ணுவதற்காக ஏற்படுத்தப் பட்டவைகளாம். மேற்கண்ட ஸமஸ்காரங்களைச் செய்யும்போது புவர், சுவர் மஹர் ஜனோலோகங்களில் எவ்விதமான மாறுதல்கள் உண்டாகின்றன வென்றும், என்ன அழகிய ரூபங்கள் உண்டாகின்றன வென்றும், ஈசுவரனுடைய அனுக்கிரஹமானது பக்தர்களையும் அவர்கள் மூலம் உலகத்தையும் எப்படி தன்

தண்ணளியால் நிரப்புகிறதென்றும், பக்தர்களின் ஸ்தோத்திரங்கள் எங்ஙனம் ஈசுவரனுடைய சரண கமலங்களை அடைகின்றனவென்றும், தான் கண்ட வற்றை உள்ளபடி கூறுகிறார். ஆதியில் ஸ்தாபிக்கப் பட்ட ஸம்ஸ்காரத்தில் பின்னர், அஞ்ஞானத்தால் சில பாகங்கள் சேர்க்கப் பட்டு அதன் அழகையும் பயனையும் கெடுத்திருக்கின்றனவென்றும் கூறுகிறார். மறுபடியும் உண்மையறிவுண்டானால் அக்கெடுதல்களை நீக்கி முன்னர் போல வீர்யவத்தரமாகச் செய்யலாம் என்றும் எடுத்துக் காட்டுகிறார். நம்முடைய மடாதிபதிகளும் ஆசார்யர்களும், அங்ஙனம் ஞானக்கண் பெற்றவர்களாய் நமது ஹிந்து ஸம்ஸ்காரங்களையும் பரிசிலனை செய்யக் கூடியவர்களாய் ஏற்பட்டு அவைகளில் பின்னர் ஏதாவது பாகங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவைகளை நீக்கி வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்தால் எவ்வளவு நன்மையாகும்! ஆனால் அந்தோ பரிதாபம்! நமது மடாதிபதிகளும் ஆசார்யர்களும் இவ்விதமான யோகசித்தியிருப்பதே சாத்தியமென்ற எண்ணமில்லாதவர்களாயும் கலிகாலத்தில் இவ்வித சித்திகள் முடியாதென்றும் கூறுகிறார்களே. இவ்வித சித்திகளைப்பெற முயல்வதைக் காணோமே. அப்படி முயன்றவர்கள் இருந்தாலும் பொது ஜனங்களுக்கு உபகாரமாயிருக்கும்படி வெளியிடுவதையும் காணோமே! இது விசனிக்கத் தகுந்த விஷயமாகும்.

* * *

இவ்விரு புஸ்தகங்களையும் உலகத்தில் உள்ள ஆங்கில பாஷையில் பயிற்சியுள்ள பலரும் படித்து ஆனந்தத்தையும், பெரும்பயனையும் அடைவார்கள் என்பது திண்ணம். ஆனால் ஆங்கிலமறியாதவர்களும் இப்புத்தகங்களில் பொதிந்து கிடக்கும் ஞானப்புதையல்களை அறிய வேண்டியது அவசியமே. ஆங்கிலத்தில் தேர்ந்த ஞானமும் தமிழில் தெளிவதும் நுட்பமானதுமான தேர்ச்சியையும் பாஷையறிவையும் படைத்தவர்கள் இப்புத்தகங்களைத் தமிழ்ப்படுத்தித் தமிழுலகுக்கு உதவுவார்களானால் அவர்கள் மிகவும்

புண்ணியம் பெறுவார்கள். ஆனால் வாக்கியம் வாக்கியமாய் வார்த்தை வார்த்தையாய் தமிழ்ப்படுத்துவது இழுக்காகும். அநேகர் தமிழ்ப்படுத்த முயன்று வருவதில் மூலம் கிரந்தத்தின் தாத்பரியத்தை வழிநூலில் புகுத்தச் சக்தியற்றவர்களாகிறார்கள். ஆனால் இவ்விரு கிரந்தங்களையுக் நன்கு தமிழ்ப்படுத்தக் கூடியவர்கள், தமிழ்ப்படுத்தினால் தமிழுலகே அவர்களைப் போற்றும்.

***

நமது அத்யாத்ம நூல்களநேகத்தை ஸமஸ்கிருதத்திலிருந்து கருத்துக்களை நன்கு விளக்கிக் காட்டியுள்ள அனேகம் தமிழ் புஸ்தகங்களிருக்கின்றன. ஆனால் அவைகள் பழய காலத்தவைகளா யிருக்கின்றன. தற்காலத்தில் அவ்வளவு நன்றாகத் தமிழ்ப்படுத்தப்பட்ட புத்தகங்கள் கிடைப்பதரிதாகிறது. ஆனால் முன்னர் சிலர் செய்ததை இப்போதும் ஏன் செய்ய முடியாது? வருந்தினால் வாராத தொன்றில்லை. ஆகையால் இந்த உத்தமமான காரியத்தை நிறைவேற்ற வல்லவர்கள் ஏற்படுவார்களென்று நம்புகிறோம்.

***

முதற் கூறிய 'மோனாட்' என்ற புஸ்தகமானது எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாகும். ஆனால் மற்றது கிறிஸ்தவர்களுடைய ஸம்ஸ்காரங்களைப் பற்றித்தானே கூறுகிறது என்றும் ஆகையால் அதை ஹிந்துக்கள் நிறைந்த இத்தென இந்தியாவில் தமிழ் பாஷையில் வெளியிடுவதினால் பயனியாதென்றும் சிலர் யோசிக்கலாம், ஆனால் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட முறையும், சப்தங்களின் பிரபாவமும் எண்ணங்களின் ரூபங்களும், தந்திரங்களின் சக்திகளும், சங்கீதத்தின் பயனும், உற்றுப் பார்ப்போருக்கு நம்முடைய ஹிந்து ஸம்ஸ்காரங்களிலும் அவைகளைப் போன்ற உண்மைகளை அனுமானத்தால் காட்டலாகும். அப்படிப்பட்ட அனுமானங்களைப் பார்க்க விரும்புவோர் பலர் தமிழறிஞருள் இருக்கலாம். ஆகையால் அவர்கள்

அறியுமாறு இப்புத்தகத்தின் சாரம்சத்தைத் தெரிவிப்பது அவசியமாகிறது. ஒருவேளை இப்புத்தகத்தின் முழுமையையும் வெளிப்படுத்த முடியாவிடினும், பற்பல பாகங்களையாவது தமிழில் வியாஸங்களாக வெளியிட்டாலும் மிகவும் நலமுண்டு.

***

கிறிஸ்துவினாலேயே ஆதியில் இச்சம்ஸ்காரத்தின் அமைப்பானது செய்யப்பட்டதாம். ஒரு விதமாய் அமைக்கப்பட்ட சப்த சமூகங்களை உச்சரிப்பதினாலும் குறிப்பிட்ட தந்திரங்களையுபயோகிப்பதாலும், புவராதி லோகங்களின் திரவியமானது ஒரு குறிப்பிட்ட அழகிய உருவங்களாய் அமைகின்றனவென்றும், இறைவனைத் தொழுவதற்குக் கூடியிருக்கும் பக்த ஜனங்களின் மனமார்ந்த பக்திக்கு ஏற்றவாறு அவ் உருவமானது பூர்த்தியாகும் என்றும் அவ்வுருவத்தை அமைப்பது ஒரு தேவனின் கடமையென்றும், அவ்வுருவத்தின் பயனாகவே ஈச்வரனது கருணையானது பக்த கோடிகளின் பேரிலும் அவர்கள் மூலம் உலகத்தின் பேரிலும் அருள் வெள்ளமாகப் பிரவகிக்கின்றதென்றும், இவ்விதமான உருவங்களையுண்டாக்கக் கிறிஸ்து பகவானால் ஆதியில் அனுக்கிரகிக்கப்பட்ட ஆசார்யர்களின் பரம்பரையில் சிஷ்யப் பிரசிஷ்யக் கிரமத்தில் வருபவர்களுக்குத்தான் சாத்தியம் என்றும் கூறுகிறார். மற்றவர்கள் இறைவனைத் தொழுவதனால் சிற்சில ரூபங்களும் பயன்களும் ஏற்படுவது வாஸ்தவமானாலும் இவ்வுயர்தரமான குறிப்பிட்ட பயனானது உண்டாவதில்லையென்றும் கூறுகிறார்.

***

இவைகளைச் சிந்தனை செய்யும்போது நமது ஸம்ஸ்காரங்கள், சிராத்தாதி கிரியைகள், இவைகளில் பிரயோகப்படும் மந்திரங்கள், தந்திரங்கள், முத்திரைகள் இவைகளையும், ஸ்ரீசக்கிரங்கள் முதலியவைகளின் பிரயோஜனத்தையும், பட்டமார் முதலியவர்கள் ஆசாரியாபிஷேகம்

செய்தல், முதலியவைகளின் ஆவசியகத்தையும், உபநயனாதி ஸம்ஸ்காரங்கள் யாகங்கள் ஹோமங்கள் இவைகளின் தத்துவத்தையும் பற்றி நமக்கு ஒருவித நம்பிக்கை ஏற்படலாம். ஆனால் சிலர் இவ்விதமான நம்பிக்கையானது பழய மூட பக்தி அல்லது மூட நம்பிக்கையே யொழிய வேறில்லையென்றும், அது ஜனங்களைச் சில அயோக்கியர்களுடைய வஞ்சனைக்கும், ஏமாற்றத்திற்கும் உட்படுத்தும் என்றும் அதனால் கெடுதியேயொழிய நன்மை ஏற்படமாட்டாதென்றும் சொல்வதற்கிடமுண்டு. அது வாஸ்தவமே. ஆனால் நமது திருஷ்டிக்குப் புலனாகாத விஷயங்களைப் பற்றிச் சொல்வது ஏமாற்றமாக இருக்கலாம் எனினும், அவைகளைச் சொல்பவர் நல்ல யோக்கியதை யுடையவர்களாயும் திருந்திய பார்வை யுள்ளவர்களாயு மிருந்தால் நாம் நம்பலாம் என்பது போல் நம்முடைய மத்தியில் யோக்கியதையுள்ளவர்களும், இவ்வித ஞானதிருஷ்டியைத் திருத்தமாயும், பரிசுத்த விதிகளுக்குட்பட்டும், சாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்பட்டும், அப்பியஸித்தவர்களும் இருந்தால், நம்முடைய மேற்கூறிய ஸம்ஸ்காரங்களைப் பற்றி நமக்குச் சரியான அறிவுண்டாகலாம். அது உண்டானால் நமக்கு லாபமே யொழிய வேறில்லை.

அன்னிபெஸண்டம்மை நீடூழிவாழ்க!

நமது அம்மையவர்கள் சிறந்த வீரர் அல்லவா? ஸ்திரீவியக்தியைத் தரித்திருந்தும், வயது 73 முடிந்தும், தம்முடன் சேர்ந்து நிற்கத் துணைவர்கள் இல்லாதிருந்தும், இவர் எப்போதும போர் புரிவதே தமது கடமையாகக் கொண்டவராயிருக்கிறார். இப்போது எதற்கு விரோதமாகப் போர்புரிகின்றனர்? "உதவி மறுத்தல்" என்ற கக்ஷியைத் தலைமை பூண்டு ஸ்ரீமான் காந்தியவர்கள் இந்தியா முழுவதையும் தம் வழியாக்க முயன்று வருகிறார். காந்தியவர்

களுடைய தூய்மையான சரித்திரமும், கபடமற்ற நடத்தையும், கம்பீரத்திற்கு இதற்குமுன் செய்திருக்கும் பேருபகாரமும் அவரையே ஒரு ரிஷிதுல்யராய் இந்தியர்கள் பார்க்கும்படி செய்கிறது. இந்தியர்களுக்கு தன்னிலைவு நன்றாய் உண்டாய்விட்டது. தம்மை அரசாட்சியோர் நன்றாக நடத்தவில்லையென்றும், அடிமைகளைப் போல் நடத்துகிறார்கள் என்றும் எண்ணம் உண்டாய்விட்டது. இவர்கள் மனோபாவம் இங்ஙனமிருக்க, அரசாங்கத்தாருக்கு உதவி செய்வதில்லையென்று இந்தியர் யாவரும் கங்கணம் கட்டிக்கொண்டு, அங்ஙனம் உதவி மறுக்கவேண்டுமென்று முயன்று வருகிறார்.

❀

“இது தேசத்திற்கே கெடுதி, உலகத்திற்கே விபத்து. நமது ஆட்சியோர் செய்வது தவறு எனினும், அத்தவறுதலைத் தண்டிக்க உதவி மறுத்தல் கொஞ்சமும் பிரயோசனம் அற்றது. இந்தியர் சென்ற 35 வருஷமாக எதைத் தேடினார்களோ அது கிட்டியிருக்கும் சமயத்தில் அதை உபயோகியாமலிருப்பது ஒரு குழந்தையானது தாயினிடம் உள்ள கோபத்தால் வெண்ணை திரண்டுவரும் சமயத்தில் தாழியை உடைப்பது போலாகும். தவிர உதவிமறுத்தலானது அரசாங்கத்தாருக்குக் கொஞ்சமும் தடங்கலையுண்டுபண்ணமாட்டாது. ஒருவேளை அவர்களைச் சட்டசபையில் தட்டிப் பேச ஆள் இல்லாமல் அவர்களை முன்னரைக் காட்டிலும் அதிக பலசாலிகளாக்கும்” என்றிவ்விதமாக உபந்யாஸங்கள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் அன்னிபெஸண்டம்மை எடுத்துரைத்து வருகிறார்.

❀

இந்தியா கோபம் கொண்டிருக்கிறது. ஒரு சார்பார் காந்தியவர்களுடன் போர் புரியாமல் சும்மாவிருக்கிறார். பெரும்பாலார் அவர்களுடன் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் விரோதமாகப் பேசுபவர்களைக் கூட அவமானப்படுத்தி அல்லற்படுத்துகிறார்கள். பூர்வாபர விரோதமில்லாதபடி ஞாயத்தைப் பரிசீலனை பண்ணி ஒரு உபந்யாஸம் செய்வது அனேகமாய் சாத்தியமில்லாமலிருக்கிறது. உதவிமறுத்தலானது சரியோ தப்போ என்று ஸந்தேகம் கொண்டவர் பெரும்பாலர் வேடிக்கை பார்ப்போம் என்ன ஆகிறது என்று பார்ப்போம் என்றிருக்கின்றனர். தாம் வேடிக்கை பார்ப்பதற்குள் நாட்டிற்கே என்ன கேடு விளையுமோ என்று

யோசிப்பதில்லை. அது நிச்சயமாய் கேடு என்று நினைப்பவரும் தம்முடைய கோழைத்தனத்தால் அதை எதிர்த்துப்போராட அஞ்சினவர்களாய், சக்தியற்றவரா யிருக்கின்றனர். ஆகவே, நமது அன்னையவர்கள் தம்முடன் சேர்ந்து போர் புரிய வெகு சிலரே யிருப்பினும் மனந்தளராமல் ஸத்யமே ஜயிக்கும் என்ற தைரியத்துடன் இம்முதிர்ந்த வயதில் போராடுகிறார். இதற்கு நிகர்த்த வீரத்தனத்தை யாராவது எங்காவது கண்டதுண்டா?

***

இவர் ஆதியில் மூட பக்தி அல்லது மூட நம்பிக்கையைப்போராடி ஜயித்தனர். அப்பால் லண்டன் நகரத்து கீழ்ப்பட்டோரின் தரித்திரத்தையும் அஞ்ஞானத்தையும் நீக்கப்போராடினார். அப்பால் சாஸ்திர ஆராய்ச்சிக்கென்று மிருகங்களைச் சித்திரவதை செய்வோரைப் போராடி ஜயித்தனர். இந்தியாவுக்கு வந்தவுடன் இந்தியர் தம்மை இகழ்ந்து மேனாட்டைப் புகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு வியந்து தம்முடைய உபந்யாஸங்களால் இவ்வஞ்ஞான இருளைப் போராடினார். பின்னர் அரசாங்கத்தார் பாதிரிமார் இருவர்களின் பேரில் முழு நம்பிக்கை வைத்து தம்முடைய மக்களுக்கு வித்தை கற்பிக்கப் பிறரை ஆசிரயித்திருக்கும் பாதந்திரத்தைப் போராடி ஜயித்தார். பின்னர் ராஜரீகமுறையில் இந்தியருக்கிருந்த ஆலஸ்யத்தையும் தமோகுணத்தையும் போராடினார். இவ்வெல்லாப் போர்களிலும் முதலில் தன்னந்தனியாயிருந்து பின்னர் ஒவ்வொன்றிலும் வெற்றிக்கொடி நாட்டி யிருக்கிறார். இப்போது கைக்கொண்ட போரிலும் அங்ஙனம் ஜயம்பெறுவார் என்பதில் ஐயம் இல்லை.

***

தமோ குணமானது இப்போது ரஜோ குணமாய் மாறி யிருக்கிறது. இனி அது ஸத்வ குணமாய் மாற வேண்டியது அவசியம் அதற்காகத்தான் நமது அன்னை பாடுபடுகிறார். ஸர்வத்திர ஸமதர்சித்துவம், அமைதி, சாந்தி, முதலிய சீரான குணங்கள் கிடைப்பது கொஞ்சம் சிரமம் தானே! அன்னிபெஸண்டம்மையவர்களது முயற்சி ஜயம் பெறுமாறு இறைவன் அருள் புரிக! இந்நாட்டில் அமைதியும் சாந்தியும் பொழிக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆர். ரெங்கசாமி ஐயர்.

தென் இந்தியா கன்வென்ஷனுக்கு எழுதியது.

(72-ம் பக்கத்தொடர்ச்சி.)

கிரியா லோகத்திற்கு முக்தி நம்முடைய பிரஹ்மஞான உழைப்பால் தான் உண்டாகும். காரியத்தின் பாரத்தால் அமுக்கப்படும் அடிமைக்கு பிரஹ்ம ஞான உழைப்பானது விடுதலையைக் கொடுக்கும். உழைப்பாளியை ஸதா உழைக்கவேண்டும் என்ற பந்தத்திலிருந்து விடுவிப்பது பிரஹ்மஞானத் தொண்டு தான். ஆத்ம உணர்ச்சியோடு கர்மத்தைச் செய்வதினால், நாம் சரீரத்தின் பொருட்டு கர்மத்தைச்செய்து உழல்பவனுக்கு நீயும் ஆத்மாவின் ஆனந்தத்தின் பொருட்டுத்தான் உழைக்கவேண்டும் என்று கற்பிக்கலாம். உழைப்போன் உழைப்பில் ஆத்மாவின விலாசத்தைக் காணப்பழகுவானாயின், அப்போது உழைப்பு பளுவாயிருக்காது. உழைப்பெல்லாம் ஆனந்தமாக ஆய் விடும்.

ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாருடனும் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருடனும் போர்செய்யும் இக்கலியுகத்தில், மனிதன் உண்மையான விடுதலையை அடைவது எங்ஙனம் எனில், உண்மையான பரோபகாரம் யாதெனில், ஸர்வ சகோதரபாவத்தை நம் நடத்தையால் நிரூபித்துக் காட்டலேயாம். வார்த்தையால் உபதேசம் செய்வதைக் காட்டிலும் நடத்தையில் நிரூபிப்பது மேலாகும். இதுவே பிரஹ்மஞானி மானிடசகோதரர்களுக்குச் செய்யக் கூடிய பேருபகாரம்.

பூலோகத்தில் ஏற்படக்கூடிய பற்பல கஷ்டங்களை அவைகளுக்கெல்லாம் மூலமான சூக்ஷ்மலோகத்தில் உள்ள ஒரு மூலகாரணத்தைச் சரியாயமைப்பதினால் நீக்கலாம்

என்று ஸ்ரீமதி பிளவாட்ஸ்கியம்மாள் சொல்லவில்லையா? "அவ்விதமான சக்தியையும் அறிவையும் பெறுதற்கான படி வாழ்வை நடத்து. ஞானமானது உன்னைத்தானே சுபாவமாய் வந்தடையும்" என்று ஒரு மகான் கூறியுள்ளார், ஆகையால் நாம் முதற் கண் தியானம் செய்ய அப்பிய சிக்கவேண்டியது.

நாம் இரண்டாவதாகச் செய்யவேண்டியது யாதெனில் பிரஹ்மஞான அறிவை உலகில பரவச்செய்யவேண்டியது. "ஸீக்ரெட் டாக்டிரின்" அல்லது குஹ்யசாஸ்திரம் என்ற அருமையான புஸ்தகத்திற்கு எழுதிய முகவுரையில ஸ்ரீமதி பிளவாட்ஸ்கி அம்மாள் கூறியுள்ள மூன்று பிரஹ்ம ஞான மூலதத்துவங்களை உலகத்தார் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நாம் இத்தனை வருஷங்களாக அறிவைப் பரவச் செய்வதற்காகச் செய்த கிளர்ச்சியானது உலகத்தை ஆபத்தப்படுத்தியிருக்கிறது. அத்தத்துவங்களை உலகத் தில் தற்காலத்திய சங்கடங்களை நிவர்த்திப்பதற்காக ஏற்ற படி உபயோகிப்பது நம்முடைய கடமையாகும். அப்படி உபயோகிப்பதோடு, அம்மூலதத்துவங்களை யாவரும் அறியும்படி பரவச்செய்யவேண்டும். நம்மைவிட மேற் கூறிய உண்மைகளை உலக சங்கடங்களைத் தீர்க்க உபயோ கிக்கக்கூடியவர்கள் இருக்கலாம். ஆகையால் இவ்வுண் மைகளை அறியாதவர் ஒருவர்கூட இல்லாதபடி நாம் பிர சுரப்படுத்தவேண்டும். பிரஹ்மஞானசபை அங்கத்தின ராகிய நாம் மகான்களிடமிருந்து நமக்கு ஸ்ரீ பிளவாட் ஸ்கி அம்மாள் மூலம் கிடைத்திருக்கிற ஞானத்தை உலகத்தார் அறியும்படி பரவச்செய்யவும் பொறுப்பை வகித்த பொறுப்பாளிகள் என்பதை நாம் மறக்கலாகாது நம் முடைய நடத்தையாலும் வேலையாலும் பிரஹ்மஞான த்தை யாவரும் அறியச்செய்வோமாக!

மேற்கூறியதுதான் நாம் செய்யவேண்டிய கடமை என்று எனக்குத்தோன்றுகிறது. ஆகையால் தென்

இந்திய கன்வென்ஷனைச் சேர்ந்த நாம் எல்லோரும் இவ் விஷயத்தைச்சிந்தனை செய்து நம்முடைய குருநாதர்களும் பிரஹ்ஞான சபைக்கு உண்மையான ஸ்தாபகர்களும், அச் சபையைப் பாதுகாத்து நடப்பிவித்து வந்து அதன் மூலம் உலகத்தையே உய்வித்து வருபவர்களுமான ஞானகுரவர்களுக்கு நாம் செய்யவேண்டிய தொண்டைச் செய்து முடிப்போமாக!

உங்கள் விதேயன்,
பி. பி. வாடியா,
தென் இந்தியக் கன்வென்ஷன்
அக்கிராசனர்.

அடையாறு,
1920ஹு ஆகஸ்டு 21உ

அஸீரியா நாட்டு அரசனான அஸார கேடன் சரித்திரம்.

(108-ம் பக்கத் தொடர்ச்சி)

"இது வெறும் மாயை. நீ வதைத்தது உன்னையே யன்றி அவர்களை யல்ல" என்றார் கிழவர்.

"எனக்குத் தாங்கள் சொல்வது சிறிதும் தெளிவாக வில்லை." என்றான் அரசன்.

"ஆனால், உண்மையை யறிய உனக்கு இஷ்டந்தானா?" என்று பெரியவர் வினவினார்.

"ஆம்" என்றான் அரசன்.

அப்பொழுது பெரியவர் அரசனை அந்த அறையிலிருந்த தண்ணீர் நிறைந்த ஒரு தொட்டியினருகில் வரும்படி யழைத்து அதற்கு ளிறங்கச் சொன்னார்.

அரசனும் அவ்வண்ணமே செய்தான். அப்போது பெரியவர் நான் இப்போது உன் தலைமேல் தண்ணீர் ஊற்றுவேன், ஒரு சொட்டு நீர் விழுந்ததும் தலையை உள்ளே இழுத்துக்கொள் என்று சொல்லி ஒரு செம்பில் ஜலத்தை கொண்டு அவன் தலையின்மேல் ஊற்றினார். உடனே அரசனுக்குத்தான் அஸாரகேடனல்ல. வேறு மனிதன், என்ற உணர்ச்சி உண்டாயிற்று.

மாறுதலடைந்த அரசன் ஸர்வாலங்காரங்களும் நிறைந்த ஒரு அறையில் தானிருப்பதையும் தன்னெதிரில் அன்னிய ஸ்திரீ பொருந்தியிருப்பதையுங் கண்டான். அந்த ஸ்திரீ இவனுக்கு சமீபத்தில் வந்துட்கார்ந்துகொண்டு "என்னருமைக் கணவரே, லஹிலீ! நேற்று வெகுவாய்ப் பாடுபட்டதினால் தாங்கள் களைத்திருக்கிறீர்கள். அதினாற்றான் தாங்கள் வெகுநேரமாகியும் நித்திரைவிட்டு எழுந்திருக்கவில்லை. நானும் சலித்துப்படுத்திருப்பவரை எழுப்பக்கூடாதென்று சும்மாவிருந்துவிட்டேன். இப்போது நமது குமாரர்களெல்லாம் தங்களது வரவை யெதிர்பார்த்தவராய் ஆஸ்தான மண்டபத்தில் கூடியிருக்கின்றனர். தாங்கள் எழுந்து ஆடையாபரணங்களணிந்து கொண்டு அவர்களைப்போய்ப் பாருங்கள்" என்று சொன்னாள்.

இந்த வார்த்தைகளைக்கேட்டவுடன் அஸாரகேடன் தான் லஹிலி யென்றே நினைத்துக்கொண்டதுமன்றி தான் அவ்வாறு மாறினது ஆச்சரியமல்லவென்றும் தானே லஹிலியென்று அதுவரை அறியாமலிருந்ததே ஆச்சரியம் என்றும் தெரிந்து கொண்டான். உடனே அவன் எழுந்திருந்து ஆடையாபரணங்களணிந்து ஸபாமண்டபம் சென்று அங்குள்ள ராஜகுமாரர்களால் வணங்கப்பெற்றான். அப்போது ராஜகுமாரர்களில் மூத்தவன் தனது ஆஸனத்தைவிட்டெழுந்து நின்று கொடியனாகிய அஸாரகேடனது அளவற்ற அநியாயங்களைத் தாங்கள் இனி ஒரு நிமிஷமேனும் பொறு

க்கமுடியாதென்றும் அவன்மேல் தாங்களெல்லோரும் படையெடுத்துச் செல்லவேண்டியது அவசியமென்றும நீண்டதொரு பிரஸங்கம் செய்தான். லஹிஸி இந்தயோசனைக்கு உடன்படாமல் அஸாரகேடனுக்கு ஹிதோபதேசம் செய்யுமாறு தூதர்களையனுப்புவதே தகுதியென்று தீர்மானித்து அவ்வண்ணமே செய்யும்படி தனது மந்திரிக்குக் கட்டளையிட்டு இராஜகுமாரர்களுக்கு விடை கொடுத்தனுப்பினான். பின்பு தனது பிரஜைகளில சாந்த ஸ்வபாவமுள்ள சிலரைத் தூதர்களாகத் தெரிந்தெடுத்து அவர்கள் அஸாரகேடனிடம் இன்னின்ன விஷயங்களைப்பற்றி இன்னினவிதம் பிரஸ்தாபம செய்யவேண்டுமென்று விஸ்தாரமாகப் பிரஸங்கஞ் செய்தான். இதற்குப்பின் லஹிஸியாக மாறின அஸாரகேடன் மலைப்பிராந்தியங்களிலுள்ள காட்டுக்கழுதைகளை வேட்டையாடினான். வேட்டை வெகு நேர்த்தியாயிருந்தது. தானே அனேகமிருகங்களைக் கொன்றான். பின்பு அரண்மனைக்குத் திரும்பிவந்து தனது அடிமைப்பெண்கள் ஆடியும் பாடியும் ஆனந்தத்தையுண்டாக்கத் தனது சிநேகிதர்களுடன் உல்லாஸமாயிருந்தான்.

மறுநாள் வழக்கப்படி தனது ஸபா மண்டபஞ்சேர்ந்து, அங்கே நியாயவாதிகளும், குறை கூறுவோரும் குற்றஞ் செய்தவருமிருக்கக்கண்டு அவர்களது வழக்குகளைக்கேட்டு விதிப்படி தீர்ப்புச் செய்தான். இந்த வேலை முடிந்ததும் தனக்குப்பிரியமான விளையாட்டாகிய வேட்டைக்கு மறுபடியும் புறப்பட்டான். இந்த வேட்டையில் ஒரு கிழப்பெண் சிங்கத்தைக்கொன்று அதன் குட்டிகளிரண்டையும் பிடித்துவிட்டான். இந்தக் கனவேட்டை முடிந்ததும் தனது நண்பருடன்கூடி முன்னிலுமதிகமாய்க் களித்தான். அவர்களும் இராத்திரி வெகுநேரம் வரை ஆடிப்பாடிக் களித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு முன்புகாறுகை விருந்த அஸாரகேடனிடம், அனுப்பிய தூதர்களின் வரவை யெதிர்பார்த்தவனுய்த் தனது ராஜ்யகாரியங்களையும் பொழுதைப் போக்குவதான விளையாட்டுகளையும் நடத்திக்கொண்டு வெகு நாட் கழித்தான். ஒரு மாதத்திற்குப்பின், தூதர்கள் காதறு பட்டவர்களாய்த் திரும்பிவந்து "வெள்ளியும் பொன்னும் வாஸனைத்திரவியங்களும் கப்பமாகக்கொண்டு, தானே வந்து செலுத்தி வணங்காவிடில், லஹிலியையும் இவ் வண்ணமே செய்வேன் என்று நான் சொன்னதாக அவனுக்கு அறிவியுங்கள்" என்று அஸாரகேடன் சொன்னதாகத் தெரிவித்தனர். அதன்மேல், லஹிலி, இராஜகுமாரர்களைத்தனது ஸபைக்கு வரவழைத்து "இனிச்செய்ய வேண்டியதென்ன, வென்று யோசனைசெய்தான். அவர்களெல்லோரும் ஒரே மனத்தினராய் அஸாரகேடன் படையெடுத்து வருமுன்னமேயே தாங்கள் அவன்மேல் படையெடுத்துச் சென்று அவனை வதைக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தனர்.

அரசன் இதற்குச் சம்மதித்து, ஸேனாதிபத்தியம் தானே வஹித்து யுத்தத்திற்குப் புறப்பட்டான். சேனைகளும் ஏழுநாள் வழிநடந்தன.

ஒவ்வொருநாளும் அரசன் தனது ஸைன்யங்களைப் பரீக்ஷித்தும், தனது வீரர்களுக்கு உத்ஸாஹமுண்டாகும்படி பேசியும் வந்தான்.

எட்டாநாள் இவனுடைய ஸைன்யங்களும் அஸாரகேடனுடைய ஸைன்யங்களும் ஒரு ஆற்றையடுத்த பெரிய களத்தில் ஸந்தித்தன. லஹிலியின் போர் வீரர்கள் வெகு உத்ஸாஹத்துடன் சண்டைசெய்தனர்.

ஆனால் முன்பு அஸாரகேடனுயிருந்த லஹிலியோ தனது விரோதிகள் வெகு தூரமிருக்கும் ஒருமலையின்

ருந்து, எறும்புகளைப்போல் ஒரு பள்ளத்தாக்கி லிறங்கி வந்து தனது சேனைகளை முறியடிப்பதைப் பார்த்தான். லஹிஸியின் ஸைன்யம் நூற்றுக்கணக்கானதாயும் அஸாரகேடனது ஆயிரக்கணக்கானதாயு மிருந்தது. கடைசியாக லஹிஸிக்கும் காயம்பட்டு அவனும் பிடிக்கப்பட்டான்.

அதன் பிறகு ஒன்பது நாள் மற்றைய கைதிகளுடன் விலங்குகளணிந்து அஸாரகேடனுடைய வீரரின் காவலுக்குட்பட்டுக் கால்நோகவழி நடக்க வேண்டியதாயிற்று.

பத்தாநாள் நினிவே என்ற பட்டணம் சேர்ந்து அங்கே ஒரு கூட்டிலடைபட்டான். அப்போது இவனுக்குப் பசியாலும் காயங்களாலுமுண்டான வருத்தத்தைக் காட்டிலும் அவமானம், உள்ளங்கவர்ந் தெழுஞ்சினம் இவற்றாலுண்டான வருத்தமே அதிகமாயிருந்தது. அச்சமயம் தன்னெதிரிகளின் மேல் பழிவாங்கத் தான் சக்தியற்றிருப்பதையும் அவனுணர்ந்தான். அப்போது இவன் தனது கஷ்டத்தைத் தன்னெதிரிகளுக்குக் காட்டாதிருத்தலே தகுதியென்றும், தானச்சமயம் செய்யக்கூடியது வேறொன்றுமில்லையென்று முணர்ந்து மனத்தைத்திடப்படுத்திக்கொண்டான். இவ்வாறு கூண்டிலேயே இருபது நாள் கிடந்தான். அப்போது இவனெதிரில் இவனது தாய் தந்தையரும் நண்பரும் கழுவேற்றப்படுவதையும், அவர்களிடும் கூக்குரலையும் தனது பரிஜனங்களிற் சிலர் மாறுகால் மாறுகை வாங்கப்படுவதையும் வேறு சிலர் தோலுரிபடுவதையும் இவன் தன் கண்ணாலேயே பார்த்தானேனும், சிறிதும் மனக்கலக்கமோ, இரக்கமோ, பயமோ உள்ளவனாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஒருகால இரண்டு அடிமைகள், அழகு மிகுந்தவளான தனது மனைவியைக் கயிற்றாற் கட்டி, அவளை அஸாரகேடனது அந்தப்புரத்திற்கு இவனெதிரிலேயே இழுத்துச் சென்ற

னர். இதைக் கண்ணுற்றும் இவனது மனம் சிறிதும் கலங்கவில்லை. அப்போது இவனைக் காத்து வந்த சேவகன் ஒருவன் இவனைப் பார்த்து "லஹிலீ, உன்னைப்பார்த்தால எனவயிறு எரிகிறது! நீ முன்பு இருந்த பதவி யென்ன இப்போது இருக்கும் பதவி யென்ன! என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்ட பொழுது லஹிலீ தனது லாப நஷ்டங்களைக் கணக்கிட்டுப்பின் இனி உயிர் தரித்திருப்பது வீண் என்று தீர்மானித்துத் தன் கூண்டின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுவதாகத் தீர்மானித்துத் தன் தலையை மோதிக்கொண்டான். ஆனல் ஒட்டி யொடுங்கிக் கிடந்ததினாலும், தேஹத்தில் சிறிதும் சக்தியில்லா திருந்ததினாலும், கம்பிகளின் மேல் மோதிக்கொண்டவன் தேம்பித் தேம்பி அழுது கொண்டு அடியற்ற பனை போல் நிலத்தின்மேல் விழுந்தான்.

பின்பு இரண்டு கொலையாளிகள் இவனது கூண்டைத் திறந்து இவனது கைகளை முதுகின்பக்கம் சேர்த்துப் பிணித்து இவனைக் கொலைக் களத்திற்கு நடத்திச்சென்றனர். அக்கொலைக்களத்தில் வெட்டுண்டு மடிந்தவரின் உடலினின்றும் சொரிந்த இரத்தம் ஆறாகப்பெருகியிருந்தது (முன்பு அஸாரகேடனுயிருந்த) லஹிலீ கொலைக்களம் சேர்ந்தவுடன் அங்கே கூறான கழு வொன்றிருப்பதையும் அதனின் மம் அப்போதுதான் தனது ஸ்னேகிதன் ஒருவனது உயிரற்ற உடலொன்று எபெட்டிருப்பதையும் அதன் மேல் இனித்தான் ஏறவேண்டிய முறை வந்து விட்டதென்றும் அறிந்தான்.

கொலையாளிகள் அப்பொழுது இவனது ஆடையாபரணங்களைக் கழற்றிவிடவே லஹிலீ யாயிருக்கும் அஸாரகேடனும் சில தினங்களுக்கு முன் கொழுத்து வலுத்திருந்த தனது உடம்பு அதிசீக்கிரம் மெலிந்து போனதைக் கண்டு மிகவும் துக்கித்தான்.

கொலையாளிகளிருவரும் இவனது எலும்பு போன்ற இரண்டு தொடைகளையும் பிடித்து உயரத்தூக்கி இவனைக் கழுவிலேற்றினர். அப்போது நமது வாழ்வு இன்னும் ஒரு க்ஷணந்தான். அதன் பின் மரணமும் அழிவுமே நமது கதி என்று நினைத்தவனுக் கடைசிவரையிலும் சாந்தமாயும் தைரியமாயு மிருக்கவேண்டுமென்று தீர்மானித்த லஹிலி "ஐயோ, கொஞ்சமும் இரக்கம் கிடையாதா?" என்று கதறினான். ஆனாலென்ன? இவனது கூக்குரலை ஒருவரும் கவனிக்கவில்லை. அப்போது "நமக்கு இந்தகதி வராது. நாம் தூங்குகிறோமோ? இதுவும் தூக்கத்தில் கண்டகனவோ?" என்று நினைத்துக்கொண்டு கண்ணைத் திறக்க யெத்தனித்தான். அப்போதே "நான் லஹிலி யல்லவே, அஸாரகேடனல்லவா" என்றும் நினைத்தான். பின்பு வாஸ்தவமாகவே கண்ணையுந்திறந்தான். அப்போது தான் அஸாரகேடனாகவாவது லஹிலியாகவாவது இராமல் ஒரு மிருகமாக விருப்பதைக் கண்டான்.

இதைக்கண்டு பின்னும் ஆச்சரியப்பட்டான். தவிர தான் மிருகஜாதியிலும் சேர்ந்தவனென்பது அதுவரை தெரியாமலிருந்தது அத்தியாச்சரிய மென்றுந் தெரிந்தான்.

இதன் பின்பு, லஹிலியாக மாறி அனந்தரம் மிருகமான நமது மன்னன் அஸாரகேடன் ஒரு பள்ளத்தாக்கில் மேய்ந்து கொண்டிருக்கிறான். தனது பற்களால் புல்லைப் பிடுங்கிக்கொண்டும் வாலைக்கொண்டு ஈயோட்டிக் கொண்டும் சிறிது காலங்கழிக்கிறான். அப்போது நீண்ட காதும் வரி வரியாய்க் கோடுள்ள முதுகையுமுடைய ஒரு சிறு கருங்கழுதை லஹிலியைச் சுற்றிக்குதி யாட்டம் போட்டுக் கொண்டிருந்தது. இதென்ன ஆச்சரியம். இது அஸாரகேடன் மேற்பாய்ந்து அவனது உடம்பின் மேல் தனது சிறு மூக்கையும் வைத்து நன்றாய்த்தேய்த்தது. இதைக்கண்டவுடன் அஸாரகேடன் தான் ஒரு பெருங்கழுதை யென்றும், அச்சிறு கழுதையின் தாயென்

றும் தெரிந்து கொண்டான். ஆனால் இந்த ஞானமுங்கூட அவனுக்கு ஆச்சரியத்தையா ஸங்கடத்தையா, உண்டு பண்ணவில்லை. தான் ஜன்மமெடுத்ததுப், வேறொரு ஜீவனுக்குத் தாயானதும் எவ்வளவு ஸுகமாக விருக்கிறதென்று தெரிந்து அகமகிழ்ந்தான்.

அப்போது ரீங்காரம் செய்து கொண்டு ஆகாயத்திற் பறந்து சென்ற ஒரு ஜந்து லஹிலியாகிய கழுதையினள்ளை யிறுக்கி தோலைத்துளைத்துச் சதையினுள்ளும் புகுந்தது. அஸாரசேடன் வலியால் நொந்து கழுதைக்குட்டியை ஒரு புறம் தள்ளிவிட்டு காதைச்சொறிந்து கொண்டு தான் பிரிந்து ஓடி வந்த கழுதைக்குழாத்தை நோக்கிச்சென்றான்.

குட்டியும் அவனைப்பின் தொடர்ந்து ஓடிச்சென்றது.

இவன் கிட்டத்தட்ட கழுதைக்கூட்டத்தை நெருங்கிய சமயத்தில், அக்களத்திலிருந்த கழுதைகளனைத்தும் இவனைக்கண்டு மருண்டு ஓடத்தலைப்பட்டன. அப்போது ஒரு அம்பு “கிர்” ரென்று உருமிக்கொண்டு வந்து கழுதைக் குட்டியின் கழுத்தைத் துளைத்து அவ்விடத்திலேயே காற்றிற் கசைந்து கொண்டு நின்றது. குட்டியும் மனமுருகக் கதறி, அழுது, தாயின் காலடியில் விழுந்தது. அதை விட்டுப்போக மனம் வாராமல் அஸாரசேடன் அதனருகிலேயே நின்றான். குட்டியோ, எழுந்திருக்க எத்தனிப்பதும், அவ்வாறு யெத்தனிக்கையில் தனது நீண்ட இளைத்த கால்களைக்கொண்டு ஒரு நிமிஷம் நிற்பதும் பின்பு கீழே விழுவதுமாகத் திண்டாடிற்று. அச்சமயம், அதிபயங்கரமான இருகால் பிராணி யொன்று அக்குட்டியின் மேற்பாய்ந்து அதன் கழுத்தையும் இரண்டாய்த் துண்டித்தது.

இப்போதும் அஸாரசேடன் தான் கண்டதெல்லாம் கனவாக விருத்தல் வேண்டும். தானெப்போதாயினும்

கழுதையாக மாறுவதுண்டா? என்று நினைத்துக்கொள்ளுகிறான். அவ்வாறு நினைத்துக்கொண்டே கண்ணை விழிக்கவும் பிரயத்தினப்படுகிறான். கடைசியாய் அலறியடித்துக்கொண்டு கண்ணைத்திறந்து, தொட்டியினின்றும் தலையைத் தூக்கிப் பார்க்கையில் கிழவர் தன்னருகில் நின்று கொண்டு குடத்தில் மீந்திருந்த ஜலத்தைத்தன் தலையின்மேல் கொட்டிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்றான். உடனே "ஆஹா! என்னென்ன கஷ்டங்களெல்லாம் அனுபவித்தேன்! எத்தனை நாட்கள் கஷ்டமனுபவிப்பது! இதென்ன விந்தை!" என்றான்.

கிழவர் "என்ன உளறுகிறாய்! இந்த க்ஷணந்தானே நீ உன் தலையை நீரிலாழ்த்தி உடனே நிமிர்ந்தாய். கண்ணிமைப்பொழுது தானே ஆயிற்று. குடத்திலும் நீர் இன்னும் கொஞ்சம் மிஞ்சியிருக்கிறது பார்! இப்போதாவது உனக்கு புத்தி வந்ததா? என்றார்.

அஸாரகேடன் இன்னது சொல்வதென்று தெரியாமல் ஊமைபோல் நடு நடுங்கிக் கிழவர் முன்னின்றான்.

லஹிரி நீயேதான் என்பதும், நீ கொன்ற போர்வீரர்கள் நீயேதானென்பதும், வேட்டையிற் கொன்று புசித்த வாயில்லாப் பிராணிகளும் நீயே தானென்பதும், இப்பொழுதாவது உனக்குத் தெரிந்ததா? உனக்கு மாத்திரம் உயிரிருப்பதாக வல்லவா நினைத்திருந்தாய்? இதுவரை வலைபோல் உன்னைச்சூழ்ந்திருந்த அறியாமையானது இப்பொழுதாவது உன்னை விட்டகன்றதா? பிறரை ஹிம்ஸிப்பதினால் மனிதன் தன்னையே ஹிம்ஸித்துக் கொள்ளுகிறானென்பதும் உனக்கு விளங்கிற்றா?

"ஜீவன் என்பது ஒன்றே. ஆனால் அது ஸர்வப்பிராணிகளிலும் வியாபகமா யிருக்கிறது. அப்படிவியாபகமாயிருக்கும் பிராணிகளில் நீயு மொன்று. உனக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் இந்த ஜீவனைக்கொண்டுதான் நீ ஜீவகோடிகளை

ரக்ஷிக்கவோ ஹிம்ஸிக்கவோ அல்லது அவைகளைப் பெருக்கவோ குறைக்கவோ வேண்டும். "இதனால் மனிதன் தனது ஜன்மத்தைப் புனிதமாக்கிக் கொள்வது ஸாத்தியமென்பது விளங்கவில்லையா? அதற்கு ஓர் வழியுண்டு. அதென்னவெனில், தன்னை மறந்து, ஜீவராசிகளனைத்தும் தனதுடலினொருபகுதி யென்று மதித்து அவ்வண்ணமே ஸர்வப்பிராணிகளையும் அன்புடன் ஆலோசித்து ஆதரித்தலாம். அப்படிக்கில்லாமல், உன்னை யொழிந்த மற்றவர்களை ஜீவனற்றவர்களென்றும், உனது ஸுகமே கவனிக்கத்தக்க தென்றும், நினைத்து அவ்விதமே நீ நடந்து வந்தாயெனில் உன் ஜன்மம் வீணாகுமென்பதில் சிறிது ஐயமில்லை. எவ்வளவுக் கெவ்வளவு நீ ஸ்வயம் பாராட்டுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு உனக்குக் கேடுதான். ஒரு சங்கதி மாத்திரம் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது நீ பிறரது ஜீவனை யழிக்கச் சக்தியற்றவனென்பதுதான். உன்னால் இறந்தவரின் ஜீவன்களை நீ பார்க்கமுடியவில்லையெனினும் அவரது ஜீவன்களை நீயழிக்கவில்லை. அவை உன்னால் அழிபடாதவை. பிறரைக்கொன்று உன் வாழ்நாளைப் பெருக்கிக் கொள்ளவேண்டுமென்பது உன் விருப்பமென்பது எனக்குத் தெரியும். இது உன்னாலாகாது. ஜீவன் காலதேசங்களுக்குக் கட்டுப்படாதது. ஒரு நிமிஷ வாழ்வும், ஆயிர வருஷ வாழ்வும் உனது ஜீவனும், உலகத்திலுள்ள மற்ற திருஷ்டா திருஷ்ட ஜீவன்களின வாழ்வுகளும் எல்லா மொன்றே. ஜீவனை அழிக்கவோ கூட்டவோ குறைக்கவோ எவராலுமாகாது. ஏனெனில் அது என்றும் மாறாதபொருள் உலகத்திலுள்ள மற்ற பொருள்கள் யாவும் மாயையே". என்று சொல்லி கிழவர் மறைந்தார்.

மறுநாட் காலையில் அஸாரகேட மஹாராஜா, லக்ஷ்மியையும் அவனுடன் சிறைபட்டிருந்த மற்றையோரையும் சிறையினின்றும் விடுவிக்கும் படிக்கும், கழுவேற்றத்தை நிறுத்தும் படிக்கும் உத்திரவிட்டான்.

மூன்று நாள் தன் மகனை ஆசார வெல்புலி யென்பவனைத் தன்னருகே யழைத்து அவனிடம் தன் ராஜ்யத்தை யொப்புவித்து விட்டு கிழவர் செய்த உபதேசங்களை மனனஞ் செய்யும் பொருட்டு அடவியுட் புகுந்தான். பின்பு சன்னியாசம் பூண்டு கிராம நகரங்கள் தோறுஞ் சஞ்சரித்து ஜீவன் ஒன்றே. பிறருக்குத் தீங்கு செய்வோர் தங்களுக்குத்தான் தீங்கு தேடுகின்றனர், ஆகலால் யாரும் பிறருக்குத் தீங்கு செய்வது கூடாது என்ற சங்கதிகளை எல்லா ஜனங்களுக்கும் உபதேசித்துக் காலங்கழித்தான்.

குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
உற்றுப்பார்க்கில் எல்லாஞ்சுற்றமே.
அஹிம்ஸா பரமோதர்ம:

எஸ். ஆர். அனந்தநாராயண ஐயர்.

[இது டால்ஸ்டாய் எழுதியஒரு கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு.]

தினசரி ஒழுக்கம்.

பெரியோர்களுடைய ஜீவிய சரித்திரத்தை நாம் பரிசீலனை செய்வோமாகில் அவர்களுக்கு அப்பெயர் வாய்த்தது அவர்கள் அதிக உயர்ந்த அல்லது கஷ்டசாத்தியமான வேலைகளைச் செய்து வருவதினால் அல்ல. ஆனால் சிறிய கருமங்களாயினும் அவைகளைச் செம்மையாய்ச் செய்வதினால் தான் என்று வெளியாகும். சிறிய காரியங்களையும் செம்மையாகச் செய்யின் அவைகள் பெரிய காரியங்கள் ஆகின்றன.

மாணவர்களாகிய நாம் உயர்தர விஷயங்களைப்பற்றிப் பேசுவதில் அதிக ஆசை உடையவர்களாக இருக்கிறோம். பெரிய விஷயத்தைப்பற்றிப் பரஸ்பரம் வாதித்துப் பேசுகிறோம். சாந்தம், மரியாதை, சந்துஷ்டி, பொறுமை, மனஉறுதி, பக்தி, தேசாபிமானம், தேசசேவை, தியாகம் சுதந்திரம், சமத்வம், சகோதரபாவம், இவைகளைக் குறித்தே பேசுகிறோம். கோகலே, காந்தி, திலகர், அன்னிபெசண்டு இவர்களை நாம் மகனீயர்களாய் எண்ணுகிறோம். நாம் இந்தியர்களாகையால் சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என்று வாதிக்கிறோம். உலகத்தாருக்கு நாம் ஒரு புதிய உபதேசத்தை அளிக்கப்பிறந்திருக்கும் ஆன்மஞானம் மிக்க ஜாதியாராக நினைக்கிறோம். மனிதர்கள் நாகரீகம் அடைவதற்கு முக்கிய சாதனமான சகோதரபாவத்தைப்பற்றிப் புதிது புதிதாகப் பேசுகிறோம். இத்தியாதி விஷயங்களைச் செய்து முடிக்கவல்ல பெரிய மனிதர்களாக ஆகவேண்டும் என்றும் மனோராச்சியம் செய்கிறோம்.

நாம் வாஸ்தவத்தில் மகான்களாக இருக்கக்கூடியவர்கள் தானா? நமது வீரர்களை வாஸ்தவத்தில் பின்பற்றுகிறோமா? கடவுளது ஆப்த தூதர்களாக ஆகப்போகிறோமா? என்றும் இத்தியாதி விஷயங்களைச் சற்று நிதானித்துப் பார்ப்போம். அவ்வாறு செய்வதற்கு அடியில் கண்ட கேள்விகளை நம்மை நாமே கேட்டுத் தெளிவோம்.

(1) நமது மடைப்பள்ளி வேலைக்காரர்களிடம் நாம் சாந்தகுணத்தைக் காட்டுகிறோமா? அவர்களை நாம் எந்தக் காலத்திலும் திட்டுகிறதில்லையா? அவர்களை ஒரு சமயமாவது அடிக்கிறதில்லையா?

(2) நமது போஜனசாலையிலுள்ள நமது சகோதரர்களிடம் மரியாதையாய நடந்து அவர்களுக்கு என்ன உபகாரம் செய்யலாம் என்று எதிர்பார்த்தவர்களாய் அவர்களுக்கு நன்மை செய்யத் தயாராயிருக்கிறோமா?

(3) கல்விச்சபைகளுக்கு அவ்வப்போது சென்று சகோதரர்களின் அபிவிருத்திக்கும் அனுஷ்டானத்திற்கும் அக்கூட்டங்கள் வழிபடக்கூடியதாகச் செய்கிறோமா? நம்மால் கூடியவரையில அக்கூட்டத்தின் மாதாந்திரச்சந்தாவை சரிவரச் செலுத்தி வருகிறோமா?

(4) தொண்டுசெய்யப் பூரணமாய் நாட்டமுடையவர்களாகி அபகாரம் என்னும் வழியில் விழா வண்ணம் நம்மைக் காத்துக் கொள்ளுகிறோமா? நம்முடன் படிக்கும் மாணவர்களுக்கு நாம் பலவிதத்திலும் இடைஞ்சல் செய்யவில்லையா? காலேஜ் வகுப்புகளில் நாம் குறிப்பிட்ட காலங்களில் ஆஜராகாமல் கெட்டவழிகளில் செல்வதற்கு நாம் வழிகாட்டிகளாக இல்லையா? நமக்கு வரும் கடிதங்களுக்கு நாம் அவ்வப்போது தாமதமின்றி பதிலளிக்கிறோமா? நாம் பிறரோடு நாம் நடப்பதாக ஒப்புக்கொண்டபடி நடவாமல் ஒப்பந்தத்தை நாம் அலக்ஷியம் செய்வதில்லையா? நாம் அநாகரீகமான வார்த்தைகளை உபயோகிப்பதும், புறங்கூறியும், வம்புபேசியும், பிறர் மனதைப் புண்படுத்தும்படியான பரிகாச வார்த்தைகளை உபயோகித்தும் நாம் களிக்கவில்லையா?

(5) மதம், ஆசார சீர்திருத்தம் அல்லது ராஜீய விஷயம் முதலான நமது தேசியக் காரியங்களை ஆழ அமரப்படிக்கிறோமா? நன்றாய் தீர்க்க ஆலோசனை செய்தே நாம் ஒரு அப்பியாசத்துக்கு வருகிறோமா? நமது ஜன்ம பூமியில் விவேகமுள்ள தொண்டர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கருத்துடன் நாம் நமதிஷ்டர்களுடன் பேசி நமது அபிப்பிராயத்தைக் கொடுத்து அவர்களுடைய அபிப்பிராயத்தையும் அறிந்து கொள்ளுகிறோமா?

(6) சுயேச்சையும் சகோதரபாவமும் நம்முடையதாக வேண்டுமென்ற அபிப்பிராயம் நம்மிடத்தில் வாஸ்தவத்தில் குடிகொண்டிருக்கிறதா? ஸ்திரீ ஜாதிகளான

நமது சகோதரிகளிடத்தும் மனைவிகளிடத்தும் சரிவர நடந்து கொள்ளுதலைப்பற்றி எப்பொழுதாவது சிந்தித்திருப்போமா? அவர்களுக்கு கல்விக் கற்பிக்க ஏதேனும் நடவடிக்கை நடத்தியிருக்கிறோமா? இன்னும் தீண்டாதவர்களென்று இழிவாய்ப் பேசும் இலட்சக்கணக்கான இந்தியர்களிடம் நாம் காருண்ணியத்தைக் காட்டினோமா? நமது போஜன விடுதிச்சேர்ப்பட்ட நாவிதன், வண்ணான், ஜாடுமாலி, முதலியவர்களிடம் இன்சொல்லே பேசி நமது பாவங்களைப்போக்கடிக்கிறோமா?

7 "மகாத்மா காந்திக்கு ஜேய்" என்று கூப்பாடு போடும்போழுது அவர் எந்த சிறந்த தத்துவங்களால் சிறப்புற்றிருக்கிறார் என்பதைப்பற்றி கணமேனும் நாம் சிந்திக்கிறோமா? அவர் தன்னடத்தையில் இன்றியமையாதனவாகக் கொண்டிருக்கும் "சத்தியம்" "அஹிம்சை" என்னும் லட்சியங்களைக் கொண்டு நமது ஆன்ம புஷ்பங்களை மலரச்செய்கிறோமா? நாம் லோகமானிய திலகரைச் சிந்திக்கும்பொழுது அவர் அனுஷ்டித்துக் காட்டும் யஜ்ஞசைஷ்யத்தை கொண்டு நமது ஆன்மபுஷ்பத்தை விகசிக்கச் செய்கிறோமா? நாம் வசந்த மாதாவை நல்வரவுகூறும் பொழுது அந்த அம்மாளுடைய அனுஷ்டானமான அன்பு சேவை என்னும் லக்ஷியங்கள் நமது ஆன்ம புஷ்பத்தை மலரச்செய்கின்றவா?

(8) நமது அன்பார்ந்த தேசத்திற்கும் நமது தேசவாசிகளுக்கும் தொண்டு செய்யக்கூடிய சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கும்படி நாம் பிரதிதினமும் எங்குறுங் கடவுளை வழிபடுகிறோமா? நமது குருநாதனுடைய சத்தப்படிக்கும் அவர் வரையறுத்த விதிகளுக்கும் அனுசரித்தவர்களாய் நம் குருநாதனுடைய சன்னிதானத்தில் நாம் தலை வணங்குகிறோமா?

இவ்விதமான கேள்விகளுக்கு நாம் சரியானபடி பதில் அளிக்கக் கூடாதவர்களாயிருந்தால் நாம் எவ்வாறு

மகான்களாகிறது? உயர்தரக் காரியங்கள் முடிக்கப்போதுமான சந்தர்ப்பங்கள் நமக்கு எப்படி உண்டாகப்போகின்றன ?

ஒரு கருமத்தை விதைத்தால் ஒரு பழக்கத்தைப் பலனாய் அடைவாய். ஒரு பழக்கத்தை விதைத்தால் ஒரு குணத்தைப் பலனாய் அறுப்பாய். ஒரு குணத்தை விதைத்தால் ஒரு விதியைப் பலனாய் அடைவாய் என்னும் பழமொழி உலகத்தில் உலாவி வருகிறது. ஆகையால் நாம் செய்ய வேண்டிய காரியம் எவ்வளவு அற்பமாயிருப்பினும் அதை அலக்ஷியம் செய்யாது "செய்வன திருந்தச்செய்" என்னும் முதுரைப்படி குருநாதன் வந்துபார்த்தால் அவர் ஒப்புக்கொள்ளுமாறு அவருடைய கைங்கரியமாக நாம் செவ்வனே செய்வோம். தற்காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் சிறு சந்தர்ப்பங்களை நாம் கவனியாது நழுவவிட்டால் பெரிய சமயங்கள் நமக்கு எக்காலத்தும் கிட்டாது. அதன் உண்மையாதெனின், ஸ்ரீமான் அருண்டேல் சொல்லுகிறபடி எக்காரியத்தையும் நாம் செய்யும்பொழுது குருநாதனைத் தியானித்துச் செய்தால் அக்காரியங்கள் எல்லாம் குருநாதனுடைய காரியங்களாகின்றன. இதை விட்டே காரியத்தின் தன்மை பெரிது சிறிது உயர்வு தாழ்வு என்றெண்ணுவது நமது லக்ஷியமல்ல வென்பதை நாம் தெரிந்து கொள்ளக் கடவோம். நீ செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்கும் குருநாதன் பார்வை ஏற்படுகிறதென்றும் அதை ஒட்டியே உன்னால் ஒவ்வொரு காரியமும் உனக்கும் குருநாதனுக்கும் ஒரு பின்னலை ஏற்படுத்துகிற தென்றுமே நீ அறிந்து கொள்ளவேண்டியது. சிநேகிதர்களே இதை மனதில் வைத்து இந்த நோக்கத்தோடேயே நாம் காரியங்களைச் செய்ய ஆரம்பிப்போம். திருகரணசுத்தியாய் மனோவாக்குக் காயங்களால் உயர்தர வாழ்வை அடைய அடிப்படை போடுவோம். நமது எண்ணங்களைப்பற்றி முக்கியமாய் கவனம் செலுத்த வேண்டும். எண்ணங்களுக்குச் சிருஷ்

டிக்கும் சக்தி உண்டு. நிச்சயமாய்க் காரியங்கள் யாவும் எண்ணத்தினாலேயே உண்டாகின்றன.

ஆகையால் நாம் செய்யும் அற்ப காரியங்களிலும் நமது மனத்துள் ஊசலாடும் பெருந்தன்மையை கொஞ்சமாவது வெளிக்காட்டும்படி கடவுள் அருள்புரிவாராக, சிறுபிள்ளைகளாய் நாம் பேசிக்கொள்ளும் பொழுதும் சிறுபிள்ளைகளாகக் கடிதங்கள் எழுதும் பொழுதும் நாம் எவ்வாறாக இருக்கவேண்டுமென்று கனவு காண்கிறோமோ அப்படி இருப்பதாகக் கொஞ்சமாவது நமது நடவடிக்கையில் காட்டவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இப்பொழுதே நம்மா திருபூமியின் பிரதிநிதியாக உடலெடுத்ததாகக் காட்டுவோம்.

எம். எம். வர்மா

[மாணவர்களுக்குச் செய்த உபந்நியாசத்தின் மொழிப் பெயர்ப்பு. தியாஸபி இன் இந்தியா என்ற பத்திரிகை 1920௵ பிப்ரவரி சஞ்சிகையில் வெளிவந்தது. வி. ரா. நாயுடு.]

பிரஹ்மஞான சபையின் கொள்கைகள்.

𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 அதாவது சத்தியத்தை விட வேறு மேலான தர்மம் ஒன்றும் இல்லை என்பதே பிரம்மஞான சபையின் முக்கியக் கோட்பாடு. இதை ஒட்டியேதான நமது மனோ வாக்குக் காயங்களுக்கு ஒரு நிறவுகோலேற்படுகிறது. ஆனதுபற்றி நமது புத்தியால் வஸ்தவமல்லாதென்று புலப்படும் எதையும் நாம் அங்கீகரிக்கக்கூடாது. எல்லா விஷயங்களும் அவைகளைப்பற்றின மட்டில் தாரதம்மியமாய் வாஸ்தவமாக இருக்கின்றன

ஆனால் நாம் எவ்வளவுக் கெவ்வளவு பரிசிலனை செய்து அவைகளை அறிகிறோமோ விஷயங்களின் வாஸ்தவமும் அதை ஒத்ததாக இருக்கிறது. இத்தியாதி காரணங்களால் வஸ்துக்கள் அவைகள் எந்த அதிகாரிகளிடமிருந்து வந்தாலும் அவைகளின் உண்மை நமது புத்திக்குப் பொருந்தாது போனால் நாம் அவைகளை உண்மையென்று நம்பக்கூடாது. இந்தக் கொள்கை முதலெடுப்பில் அனுசிதமாகத் தோன்றலாம். அதனால் குழப்பத்தையும் உண்டுபண்ணலாம். ஆனால் நாளாவட்டத்தில் அந்தக் கொள்கையை அனுசரிப்பவனுக்கு அதுவே ஒரு பெருங் காவலாகும். அவனுடைய மனஸ்வதந்திரம் என்பதைப் பரித்தியாகம் செய்யப்படாதபடி அவர்களைக் காப்பாற்றும். தவிர தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாசாங்கினின்றும் அவன் நீங்குவான்.

என்மனதில் தோன்றும் முக்கியமான இரண்டாவது அம்சம் பிரஹ்மஞானம் என்பது ஒரு தனிமதமல்ல வென்பதவும் அது மதங்களின் தத்துவ சாஸ்திரம் என்றும் துவக்கத்திலேயே சொல்லப் பட்டிருப்பதை மறக்கக்கூடாதென்பதே. ஆகையால் பிரஹ்மஞானம் என்பதை எந்த மதத்தோடும் சேர்த்து உரிமைப் படுத்தக்கூடாது. அதுபற்றி பிரஹ்மஞான மென்றால் ஒரு புதிய மதம் என்றாவது பிரத்தியேகமாய் உள்ள கோட்பாடுகள் உடைய தென்றாவது எண்ணக்கூடாது. அப்படிக்கில்லாமல் நாம் மனம் போனபடி ஒரு குறிப்பிட்டமதத்துடன் சேர்க்க ஆரம்பித்தால் அது எல்லா மதங்களையும் தழுவி நிற்கும் உத்தமமான நிலைமையிலிருந்து அதைக் குலைக்க முயல்வதாவதுடன் அந்த சபை அங்கத்தினருக்குள் மாற்சரியம் என்னும் விதையை விதைத்து சர்வமதங்களையும் சமரசப்படுத்துவதற்கென்றே யேற்படுத்தப்பட்டிருக்க பற்பல மதாபிமானிகளுக்குள் உள்ள ஒற்றுமையை பலஹீனப்படுத்த ஹேதுவாகும். இந்த சபையானது பலமதஸ்தர்களை ஒன்று

சேர்ந்து தாங்கள் எல்லோரும் ஈசுவரன் பிள்ளைகளான தால் சர்வ சகோதரபாவத்தில் ஒருவரை யொருவர் கட்டி அணைத்து தங்கள் சகோதரர்கள் அனுஷ்டித்துவரும் மதங்களைப்பற்றி த்வேஷ புத்தியின்றி நடப்பதற்காகவுமேற் பட்டது. அவனவன் தழுவி நிற்கும் மதமே அவனை உத்தேசித்து உயர்தர மதம் என்று ஒவ்வொருவனும் எண்ண வேண்டுமென்று தூண்டப் படுகிறது. இதர மதங்களைத் தூஷியாது தனமதத்தில் எதெது உயர்தர பாகம் என்று தோன்றுகிறதோ அதை வெளிப்படுத்துகிறேன். பிரஹ்ம ஞானத்தின் இந்த சாரமான கொள்கையை நாம் தவிர்க்கக் கூடாது.

இன்னும் என்மனதில் முந்திக் குடிகொண்டிருக்கும் மூன்றாவது விஷயமானது நாம் தத்துவங்களையே ஆராதிக்கவேண்டும். அதை நெறியாகக் கொண்டால் புருஷவியக்தி எவ்வளவு உயர்வு தாழ்வானாலும் பெரிதானாலும் சிறிதானாலும் சரி தத்துவத்திற்கு வழிபட்டு அதன் முன் தலைவணங்கவேண்டியதே. புருஷவியக்திக்கு மதிப்பும் பூஜ்யதையும் நிச்சயமாய் உபயோகமுள்ளவைகளே. ஆனால் அது தத்துவங்களைப்பற்றி ஒழுகுவதில் இடர்படக்கூடாது. ஒரு புருஷனுடைய பிரபாவம் நீடித்திராது. தத்துவபிரபாவமோ என்றும் அழியாதது. ஒரு வியக்தியை பூஜிப்பதென்பது அந்த வியக்தியில் தோற்றப்படும் சத்குணங்களைப்பூஜிப்பதேயாம். வேறு விதமாய்ப் பூஜித்தல் என்பது அழிவிற்கு ஏதுவாவதும் தவிர பூஜிப்பவன் பூஜிக்கப்பட்டவன் இருவர்களுக்கும் அபாயத்தை உண்டு பண்ணுவதாகும்.

எனக்குள் ஜனிக்கும் அடுத்த எண்ணமென்னவெனில் எம்மனிதனும் சதா மனோவியாபாரம் செய்துவர முடியாதென்பது, அதிலும் உயர்தர தியானத்திலேயே இருந்துவரமுடியாதென்பதுவுமே. ஆகையால் மனிதன் தன்னுடையவும் உலகத்தினுடையவும் ஆத்ம விகாசத்திற்குப் பய

ண்படும்படியான ஏதாவது ஸ்தூல உலகவேலையை எடுத்து முடிக்கவேண்டியதில் நோக்கமாயிருக்கவேண்டும். உணர்ச்சியுள்ள ஜீவர்களின் ஆத்ம விகாசத்திற்கு அனுகூலமாயிருக்கக்கூடியது எந்தக் கைங்கரியமோ அதுவே ஸத்தியமானவேலை. ஆனால் இவ்விதக் காரியங்களில் தன் மனோபாவத்திற்கு ஏற்றதாக இருப்பவைகளையே எடுத்துக்கொள்ளவேண்டும். இதைத் தான் கீதாசாரியார் ஸ்வதர்மம் என்று சொல்லுகிறார். பரதர்மம் அதாவது தன் மனோபாவத்திற்குப் பொருந்தாதவையெல்லாம் பயத்தை உண்டுபண்ணத்தக்கதென்றும் அருளியிருக்கிறார். ஆசாரசீர்திருத்தம், வியாத்திநிவிருத்தி, ராஜீயம் முதலிய விஷயங்களிலும் நாம் வேலை செய்யவேண்டியதென்பதை இதுவே நமக்குக் காட்டுகிறது. ராஜீய விஷயங்களைத் தவிர்த்து விடுங்கள் என்று முற்கால ப்ரஹ்மஞான சபையில் சொல்லப்பட்டு வந்தது சபை ஸ்தாபகர்களைச் சந்தித்து ஒற்றர்களை வைத்து சர்க்காரில்பார்வையிட்டு வந்ததினாலேற்பட்டதே ஒழிய வேறல்ல.

கடைசியாக என் மனதில் தோன்றும் விஷயம் ப்ரஹ்மஞான சங்கத்தில் அங்கத்தினர் என்று கருதும் ஒவ்வொருவரும் தினந்தோறும் கூடுமான வரையில் அதிகாலையிலும் சூரியாஸ்தமய சமயத்திலும் ஆத்ம தியானம் செய்வதில் அல்லது ஆத்ம வித்தையை அப்பியசிப்பதில் சிறிது நேரத்தைக் கழிக்கவேண்டும் என்பது. ஆத்மா என்ற பதத்தால் நாம் கொள்ளும் அபிப்பிராயம் என்னவெனில் வாகனமாகிய இந்த தேகத்தையுடைய தேஹியை. தியானமானது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்ததாயிருக்கக்கூடாது. எந்த நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கக்கூடாது. ஸ்ரீபகவத்கீதையில் 6-வது அத்தியாயத்தில் அப்பியாஸயோகமென்று பகவான் கீதாசாரியரால் சொல்லப்பட்டிருக்கிற மார்க்கத்தைத் தழுவி நிற்கவேண்டியது. ஒவ்வொருவர் மனதிலும் பதிந்து இருக்கின்ற பரமபுருஷன், (பிரத்தியகாத்மா) பிரஹ்மம் அல்லது ஈசுவரன் இடத்தில் மன

மானது ஏகாக்கிரமாய் லயித்து இருக்கச் செய்யவேண்டியது தான் தியானம். எல்லாவற்றையும் கடந்த ஆதிமூலத்துக்குத்தான் நாம் வந்தனை வழிபாடுகளாலும், அன்பினாலும் பிரேமையினாலும், மனத்திற் கிசைந்தவாறு தேசசேவையினாலும் ஆராதனை செலுத்தக்கடவோம். இவ்விதம் ஆராதனை செய்தால் பரலோகமடைவதற்குவேண்டிய ஆத்மசக்தியையும் நமக்கு இன்றியமையாததாயுள்ள அவசியமான மட்டில் ஸ்தூலலோக நன்மையும் கூடப்பெறலாம். பகவத்கீதையில் சொல்லி இருக்கிறபடி வேத புருஷனை எதனால் பிரதிபாதிக்கப்படுகிறதோ அந்த பிரணவாக்ஷரத்தை (ஓம் என்னும் ஓர் அக்ஷரத்தை) வாயாலுச்சரித்துக்கொண்டும் மனதால் என்னையே தியானித்தும் எவன் ஒருவன் இந்த ஸ்தூல சடலத்தை விட்டு விடுகிறானோ அவன் எல்லாவற்றிற்கும் மேலான கதியை அடைகிறான் என்று கீதாசாரியரால் பிரதி பாதிக்கப் பட்டிருக்கிறபடி அவனை நமது அந்தகாரத்தைப் போக்கி ஞான விளக்கை நம் மனதில் ஏற்றிவைக்கும் உத்தமகுரு வென்றும் அவனே நம் மனதில் குடிகொண்டிருக்கும் அஸுரர்களான சத்துருக்களை ஓட்டத்தக்க யுத்த வீரனென்றும் அவனே உபதேஷ்டா அநுமந்தா'' என்றும் பர்த்தா வென்றும் போக்தா என்றும் மகேசுவரன் என்றும் பரமாத்மா வென்றும் பரம்புருஷன் என்றும் அழைக்கப்படுகிறார். அவருக்கே நாமெல்லோரும் வந்தனை வழிபாடு செய்யவேண்டியது.

விசுவாஸ்.

ஓம். தத். சத்.

[தியாஸபி இன் இந்தியா என்ற ஆங்கிலப்பத்திரிகையின் 1920 பிப்ரவரிமீ சஞ்சிகையில் வந்த வியாசத்தின் மொழி பெயர்ப்பு. மொழி பெயர்த்தவர் வி. ஆர். நாயுடு]

'சமாசாரம்.

மதுரை ஜில்லா பிரஹ்மஞானக் கூட்டம்.

மதுரை ஜில்லா பிரஹ்மஞானக் கான்பரன்ஸானது திண்டுக்கல்லில் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் மடத்தில் 1920௵ சப்டம்பர்௴ 18௳ மாலை 4 மணிக்குக் கூடியது. திண்டுக்கல் முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் சே. குப்புசாமி அய்யர் அவர்கள் இச்சபைக்கு அக்கிராசனம் வகிக்கும்படி கும்பகோணம் முனிஸிபல் ஸெக்ரிடேரி ஸ்ரீமான் எஸ். ராஜாராமய்யரை வேண்டிக்கொண்டார். கான்பரஸ் ஸெக்ரிடேரி மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் என். ராமசாமி அய்யர், அதை ஆமோதிக்க, மதுரை வக்கீல் ஆர். ரெங்கசாமிஅய்யர் ஆதரித்தனர். சபையோருடைய கரகோஷ சகிதமான அங்கீகாரத்தின் பேரில் ஸ்ரீமான் எஸ். ராஜாராமய்யர் அவர்கள் அக்கிராஸனத்தை அலங்கரித்தனர். அக்கிராஸனர் அவர்கள் தமது முகவுரையில் பிரஹ்மஞானம் என்றால் என்ன அர்த்தம் என்றும் சகோதரபாவம என்றால் என்ன அர்த்தம் என்றும் விளக்கிக்காட்டி அவ்விருபதங்களைக் கேட்ட மாத்திரத்தில் சில ஜனங்கள் பிசகான தப்பெண்ணங்களைக் கொள்ளுகிறார்களே அது தவறு என்று எடுத்து விளக்கினார். சாதாரணமாக ஜனங்கள் குற்றங்களையே கூறுவது இயல்பாயிருக்கின்றதென்றும், குற்றம் பார்க்கில் சுற்றமில்லை என்றும், கூறி ஆனால் அக்குற்றம் பார்க்கும் சுபாவத்தை விலக்கி உண்மையை அறிய விருப்பமுள்ளவர்களாய் பிரஹ்மஞான சபையின் நோக்கத்தையும் கற்பனைகளையும் ஜனங்கள் பார்ப்பார்களானால், அவர்கள் நன்மை பெறுவார்கள் என்றும் கூறினார். நமது உத்தமசகோதரர்கள் தான் இச்சபைக்கு வாஸ்தவ ஸ்தாபகர்கள் என்பதை இச்சபையில் அநேகர் நம்புகிறார்கள் என்றும் அவர்களை நேரில் கண்கூடாகக் காண்பது ஒரு சிலருக்கே சாத்தியமென்றும், அவர்களை நேரில் காணும் பாக்கியம் பெற்றால் அவர்களது சாந்நித்தியத்தைத் தாங்கும்படியான யோக்கியதையானது சாதாரண ஜனங்களுக்கு இல்லையென்றும், ஆனால் ஆப்தர்களுடைய வாக்கியங்களாலும் யுக்திவாதங்களாலும் அவர்களது உண்மையை ஊகித்தறியலாம் என்றும், பிரஹ்மஞானசபைக்கு 1875௵ முதல் அடிக்கடி நேரிட்ட இடையூறுகள் மிகவும் பெரியவை

னாய் அவ்வக்காலத்தில் தோன்றினும் இச்சபையானது ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் முன்னேற்காட்டிலும். பல முன்னதாக வெளிக்கிளம்பி வந்திருப்பது அதன தெய்வத்தன்மையை பொருந்திய ஸ்தாபகர்களின் உண்மையைக் காட்டுமோர் தக்க சான்றாகும் என்றும் விவரமாய்க் கூறினர். பிரஹ்மஞான சபையின் பற்பல முயற்சிகள் எவ்வளவும் உலகக்ஷேமத்திற்கு உபயோகமாக இருக்கின்றன வென்பதையும் எடுத்துக்காட்டினர். இதன் பின்னர் ரெங்கூன் எம். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் "அத்யாத்மவாழ்வும் அதை நடத்து முறையும்" என்ற விஷயத்தைப்பற்றி அரிய வாசாலமான உபந்யாசத்தை ஆங்கிலத்தில் செய்தார். அதன் பின்னர் ஜகத்குருவின் வருகையைப்பற்றி அக்கிராசனரும், அவருக்குப் பின் ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யர் அவர்களும் அழகிய உபந்யாஸங்கள் செய்தனர். ஜகத்குரு ஸ்தோத்திரப்பாக்களை ஸ்ரீமான் ஆர். அனந்தய்யங்கார் பாட, மாலைக்கூட்டம் முடிந்தது.

மறுநாள் காலையில் 7.30 மணிக்கு கார்யாலோசனைக் கூட்டம் கூடிற்று. இக்கூட்டத்திற்கு பிரஹ்மஞான சபை அங்கத்தினர் 21 பேர் வந்திருந்தனர். அவர்களில் அறுவர் ஸ்திரீகள் என்பது சந்தோஷத்திற்கிடமான விஷயம். ஸ்ரீமான் என். ராமசுவாமி அய்யர் அவர்களை கான்பரன்ஸ் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அடுத்த வருஷாந்தரக் கூட்டம் மதுரையில் கூட வேண்டும் என்றும், ஜில்லாக் கான்பரன்ஸானது அதற்குள் அதாவது அடுத்த நவம்பர்மீ 20, 21உ களில் பெரிய குளத்தில் கூடவேண்டும் என்றும் தீர்மானிக்கலாயிற்று. இங்ஙனம் காரியாலோசனைக் கூட்டம் முடிவுபெற கானபெரன்ஸின் பொதுக்கூட்டம் 8-மணிக்குத் துவங்கிற்று. ஸ்ரீமான் எம். சுப்பிரமணிஅய்யர் அவர்கள் ஆங்கிலத்தில், "கர்மம்" என்ற விஷயத்தைப்பற்றி தெளிவாயும், யாவர் மனதில் பதியும்படிக்கும் சிறந்த உபந்யாஸத்தைச் செய்தனர். உபந்யாஸம் செய்வதில் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் மிகுந்த திறமை வாய்ந்தவராயிருப்பது யாவரும் மிகவும் பாராட்டத்தகுந்த விஷயம். உபந்யாஸ விஷயத்தை முன்னமேயே நன்கு பரியாலோசனை செய்து, பாகம் பாகமாக வகுத்துச் சொல்வதைத் தெளிவாயும் அழுத்தமாயும் சொல்லும் பழக்கத்தை நன்கு கொண்டிருக்கிறார். ஆனால் அவர் 21 வருடகாலம் பர்மாவிலேயே வாசம் செய்து வந்த காரணம் கொண்டு, அவர் தமிழில்

பேசப்போதுமான சௌகரியம் இல்லையென்று விசனித்து ஆங்கிலத்திலேயே பேசுகிறார். ஆனால் பேசும் திறமை யொன்றிருந்தால், கொஞ்சம் பழக்கத்துடன், தாய்பாஷையிலும் சீக்கிரம் வழக்கத்துக்கு வரும் என்பதில் ஐயம் இல்லை. ஆகையால் கொஞ்சம் சிரமத்தைப் பாராட்டாது தமிழில் உபந்யாஸம் செய்யப்பழகுவார்கள் என்பது நமது கோரிக்கை.

அக்ராஸனர் தமிழில் "யமளார்ஜுன பஞ்சனம்" என்ற அழகிய ஸ்ரீ பாகவதக்கதையைக் கூறி அதில் மறைந்துள்ள உயர் தத்துவங்களை எடுத்துரைத்தனர். பின்னர் உபசாரவார்த்தைகளின் நிகழச் சபை முற்றுப்பெற்றது.

திண்டுக்கல்லில் கான்பரன்ஸு கூடியது மிகவும் குறைந்த சாவகாசத்திற்குள். இருந்தபோதிலும் உபந்யாஸங்களுடைய சிறப்பிலும், உபந்யாஸகர்களுடைய ஊக்கத்திலும், இக்கான்பரன்ஸ் மிகவும் சிறந்து விளங்கியது. இன்னும் ஒரு விஷயம் யாதெனில் யாதொரு விசேஷப்பணச் செலவில்லாமல் இது நடைபெற்றது. வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் அவர் அவர்களது நண்பர்கள் வீட்டில் இறங்கி அவர்களுடைய சொந்த விருந்தாளிகள் ஆனார்கள். ஆகையால் பொதுச் செலவுக்கென்று விசேஷப்பணம் சேகரிக்க வேண்டிய அவசியம் இல்லாமற்போயிற்று. இம்மாதிரியே பெரியகுளம் கான்பரன்ஸிலும், சீக்கிரம் சிவகெங்கையில் நடக்கப்போவதாகத் தெரியவருகிற கான்பரன்ஸிலும் இம்மாதிரியே விசேஷச் செலவில்லாமலும் நடத்தலாம். பொதுவில் சாப்பாடுகள் ஸமாராதனைகள் செய்வது உத்தமந்தான். ஆனால் முக்கியமாக ஸத்விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்களைச் செய்யவும் செய்விக்கவும், ஸத்விஷயங்களை ஆரம்பிக்கவும், நடப்பிவிக்கவும், தான் இக்கான்பரன்ஸ்களின் முக்கிய நோக்கம். ஆரவாரச்செலவு அதிகம் வருமேயென்று கான்பரன்ஸ் கூடாமலிருப்பதைவிட கான்பரன்ஸை மிகுந்த சுறுக்கசெலவுடன் நடத்துவது மேன்மையாகும்.

பத்திரிகை விமர்சம்.

தாரகதூதன் 2-வது தொகுதி 1-வது பகுதி. ஆசிரியர். எ. கே. சுப்பிரமணிய ஐயர், திருச்சிறுப்பள்ளியிருலிந்து வெளியாகிறது வருடச்சந்தா 1—0—0. வி. பி. ரூ. 1—3—0.

சென்னையிலிருந்து சென்றவருடம் வெளிவந்த இப்பத்திரிகையானது இரண்டாவது தொகுதியின் துவக்கம் முதல் திருச்சியிலிருந்து வெளிவருகின்றது. சகோ. எ. கே. சுப்பிரமணியஐயர் அவர்கள் பத்திராதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் அவர் சிறந்த பக்தர். ஊக்கமுடையவர். தொண்டு செய்வதில் மிக்க ஆனந்தம் கொண்டவர். இவரது காலத்தில் இப்பத்திரிகையானது இன்னும் மேன்மையடையும் என்று எதிர்பார்க்கிறோம்.

இச்சஞ்சிகையானது நல்ல தாளில் அழகாய் நீல மையில் அச்சிடப்பட்டு கண்ணுக்கு ரமணீயமாயிருக்கிறது. தமிழில் நல்ல பழக்கமுள்ளவர்களும் மகாகுருவின் வருகையை உண்மையாய் நம்புகிறவர்களும் செய்யவேண்டிய முக்கிய கைங்கரியம் ஒன்றுண்டு அதை எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவு செய்வதைக் காணோம். இம்மாதிரியான பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதியனுப்புவது முக்கியமான கடமையாகக் கொள்ளவேணும். பத்திரிகையை நடத்துவது பத்திராசியர் காரியம் அதைப்படிப்பதோ அல்லது அதைத்தபால் மூலம் பெறுவதோ தான் தம்முடைய காரியம் என்பது சரியானதல்ல, ஆகையால் தமிழ் அறிஞரான பக்தர்கள் தம் கடமையைச் செலுத்தி இப்பத்திரிகையும் கிருதார்த்தமாக்குவார்கள் என்று நம்புகிறோம்.

கெடுதலும் பிரஹ்மஞானியும்.

இந்த பிரபஞ்சத்திலுள்ளது ஒரே சக்தி, அந்த ஒன்றும் நன்மையே. அது ஒன்றே சத்தியமானது. நித்தியமானது. கெடுதல் என்னு மொருபதார்த்த மில்லவே

யில்லை. அது ஒரு வெறும் தோற்றம். பிரஹ்மஞானியின் கொள்கையு மதுவே. கெடுதல் என்று ஒருவஸ்து இருப்பதாயும் அது எல்லாரையும் பயமுறுத்துகிறதாயும் எல்லாராலும் பழிக்கப்பட்டதாயும் ஆனால் அதிகசக்தியுள்ள வாஸ்தவ வஸ்து என்றும் பல மதங்களும் முறையிடுகின்றன. அதை எதிர்த்து நிற்கவழி இன்னதென்றும் அநேகக் கிரந்தங்கள் கூறுகின்றன. ஆனால் பிரஹ்மஞானியோ அவ்வித வஸ்து ஒன்று உலகத்தில் இல்லவே இல்லை என்றும் அதை எப்படி நிவர்த்திக்கிற தென்கிற வீண்பயம் கொள்ள வேண்டியதில்லை யென்றும் சாந்தமாகச் சொல்லுகிறான். ஒரு நல்ல தெய்வபக்தி உள்ள ஒரு மனிதன் அக்கிரமத்தை எதிர்த்துப் போராடுவதற்கு எவ்வித முயற்சி செய்யவேண்டுமென்று சொல்லுகிறான் தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல் என்றது ஒரு பழமொழி ஆனால பிரஹ்மஞானியோ அப்படிச் சொல்லுகிறதில்லை விரோதம் விரோதத்தினாலேயே தீராது அன்பினால மட்டும் தான் தீரும் என்பதை முக்கியமாகக் கொண்டு அன்பாகிய ஒரு வெளிச்சத்தை நம்மிடம் கொடுக்கிறான். அதை நாம் பத்திரமாகக் கைக்கொள்வோமானால் கெடுதல் என்பதே நம்மிடம் தலைக்காட்டாது. கானலாறு போல ஒரு தோற்றத்தைப் பொருட்டாக எண்ணி அதன் பேரில் படை எடுத்து உங்களுடைய வெடிமருந்தையும் குண்டையும் வீணாக்காதேயுங்கள். அது வாஸ்தவம் என்னும் எண்ணம் உங்களுக்குவேண்டாம். அதைப்பற்றிய நினைப்பே உங்களை அணுகவேண்டாம். அது ஒரு பதார்த்தமாக உலகத்தில் இல்லவே இல்லை. கெடுதல் என்பது பிரமாணமானதல்ல. நன்மை இல்லாததே கெடுதல் என்னப்படும். வியாதி வாஸ்தவமல்ல. தேகசௌக்கியக்குறைவே தான் வியாதி. இருட்டு ஒரு விசக்தி அல்ல. வெளிச்ச அபாவமே இருட்டு. இதுபோலவே அஞ்ஞானம், துன்மார்க்கம், பகை இதுபோன்ற சகலமும் ஒன்று இல்லாததை காட்டுகின்றனவே ஒழிய தாங்களாக வஸ்துக்களல்ல

அவைகள் அபாவத்தைத் தெரிவிக்கிற வார்த்தைகளாகும். நன்மை ஒன்றே நிச்சயமானது.

ஆகையால் பிரம்மஞானிகள் இந்த பொய்யானவைகளைத் தள்ளி வாஸ்தவமான சிலங்களைப்பற்றி கவனம் செலுத்துகிறார்கள். அபாவத்தோடு போர்புரிந்து இல்லாதவைகளை உண்டென்று நம்பிக்கை கொள்வதற்கு அவர்களுக்கு அவகாசமில்லை. அவைகளை ஒரு பொருட்டாக எண்ணுகிறதுமில்லை. கெடுதலை விரட்டி அடிப்பதற்காக தங்கள் வாழ்நாளையும் சக்தியையும் வீணே செலவழிக்கும் நிஷ்டாபடியமான உத்சாகத்திற்காக அனுதாபம் காட்டுகிறார்கள். ஆனாலந்த மாதிரி முயற்சிகளெல்லாம் புகழத்தக்கதாயிருந்தாலும் விவேகத்தோடு சேர்ந்தவையல்லவென்று எண்ணுகிறார்கள். மாயையோடு இந்த விடாச்சண்டை என்னத்திற்கு? சகோதரர்களே! சற்று யோசியுங்கள். இல்லாததை எப்படி விரட்டி அடிப்பீர்கள். வஸ்துவாக இருப்பதோடு சண்டையும் போடலாம் ஜயிக்கவும் ஜயிக்கலாம். அபாவத்தோடு யார்தான் சண்டை செய்யக்கூடும்! மனிதனுக்குச் சுபாவமாயுள்ளபடி அபாவ வியாதிகளினிடத்து அதாவது கெடுதியினிடத்து ஏதாவது அதிருப்தி உண்டானால் இயன்றமட்டில் பாவ புத்தியை முன்னுக்குக்கொண்டு வந்தாயானால் அபாவ புத்தியானது தனக்குத்தானே இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடும். வெளிச்சத்தை உள்ளே விட்டால் பாபத்தையும் வெறுப்பையும் உண்டுபண்ணும். இருள் எங்கே இருக்கும் என்று கவனியுங்கள் இருளிருந்த இடமே தெரியாதது மல்லாமல் எந்த வழியாய்ப் போச்சுதென்றும் தெரியாதல்லவா?

இந்த நியதியைத்தான் பிரஹ்மஞானி எல்லா சந்தர்ப்பங்களிலும் எல்லா விஷயங்களிலும் அனுஷ்டானத்தில் கொண்டு வருகிறான்.

பிரம்மஞானி ஒருவன் உபாத்தியாயத் தொழிலில் அமர்வதாக வைத்துக்கொள்வோம். அவிவேகத்தை போக்கடிக்கும் பொருட்டு ஒரு நிமிஷமாவது அவன் வீண் போது போக்கான். அஞ்ஞானத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விரிவாக எடுத்து அதாவது விமர்சனம் செய்ய எத்தனிப்படான். ஆனால் தன் மாணாக்கர்கள் மனதில் புதிது புதிதாக நிச்சயமான பாவங்களை எடுத்து ஓதிவருவான். அதனாலேயே அஞ்ஞானத்தை யாரும் ஒட்டாமலே அது தானாகவே ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாது பறந்தோடும். அவனைப்பற்றி இழிந்து பேசுவதில்லை. விமர்சனம் செய்கிறதுமில்லை. அதனிடத்தில் தப்பிதம் கண்டு பிடிப்பதுமில்லை. அவன் நற்புத்தியை மட்டும் புகட்டுவான்.

பிரம்மஞானி ஒரு வைத்தியத்தொழிலை மேற்கொண்டவனாக வைத்துக்கொள்வோம். அவன் வியாதியைக் கண்டிப்பதற்கு மட்டுமே மருந்து கொடுக்கமாட்டான். முதலில் தேக ஆரோக்கிய முண்டாவதற்கே மருந்து கொடுப்பான். எந்த உபாதியையும் தாத்காலிக சமனம் செய்துவிடுவதில் வியாதி நீங்கினதாக அவனுக்கு நம்பிக்கை இல்லை. நோயாளியின் ஜீவநாடிகளை, கெட்டிப்படுத்தவே அவன் முயல்வான். அவன் மருத்தின முறை எல்லாம் நல்லகாற்று, சுத்தஜலம், சாமான்யமாயிருந்தும் பலத்தை கொடுக்கக்கூடியதுமான ஆகாரம், நல்ல தேகப்பயிற்சி, உற்சாகமும் பலமுமுண்டு பண்ணக்கூடிய எண்ணங்களுமே அவன் சொல்லும் சிகிச்சை. அவன் வியாதிஸ்தனுக்குச் சொல்வதெல்லாம் உன் மட்டில் கூடிய வேலையைச்செய் உன் தேகத்தில் நல்ல சிவப்பு இரத்தம் அழகை உண்டாக்கும்படி செய் என்பதே. வியாதியைப்பற்றியே நினையாதே. அதை மனதில் வாங்காதே. வாங்கி வீண் கவலை கொள்ளாதே. நல்ல ஆரோக்கியத்தை அடையப்பார். இப்படி நடந்தால் வியாதி தன்னிச்சையாக ஓடிப்போகும்.

பிரஹ்மஞானி ஒரு ராஜ்ய வியவகாரத்தில் சேர்ந்தவனாக வைத்துக் கொள்வோம். அப்போதும் இதேமாதிரி தான் நடப்பான. கெடுதல் என்னும் சங்கதியைக் கொல்லவாவது அதைப்பற்றி இழிவாகப் பேசவாவது வழிதேட மாட்டான். கொடுங்கோலனுடைய அதிகாரத்தை எந்த நடவடிக்கை நடத்தினுல் பிடுங்கி விடலாமென்று யோசிக்க மாட்டான். யோசித்தாலு மந்தவழி தேடமாட்டான. அவன் எண்ணமெல்லாம் நன்மையின் வலிமையை அந்த கொடுங்கோலனிடம் எனனமாகப் புகட்டலாம் என்றே. அதற்காகப் பிரயாசைப்படுவான. கஷ்டப்படுத்தப்பட்டவனை ஒழுங்குபடுத்தி அவனுக்கு தைரியம் சொல்லி மயங்கி அவனுக்கு பிராண தாரையை ஊற்றுவான். வருத்துபவனை அவனை வழிக்கே விட்டுவிடுவான் அவன் கொடுங்கோன்மையைப்பற்றி மயங்கி விழ மாட்டான். ஆனல் அவன் ஜனங்களுக்கு தைரியத்தையும சக்தியையும் ஊட்டி ஒற்றுமை என்பதை வற்புறுத்தி கொடுங் கோன்மைக்குள் வாழ்வது சாத்தியமல்லவென்று உணரும்படி செய்வான். கொடுங் கோலனுக்கு நல்லெண்ணம வரவேண்டுமென்று தான் தியானிப்பான். என்னத்திற்கு வெறும்பேச்சு? பிரஹ்மஞானிக்கு எந்த வேலையைத்தான் கொடு. அவனுக்கு எந்தக கருமந்தான் ஆகவேண்டி இருக்கட்டும். அபாவத்துக்கு விரோதமாயும் உண்மை வழி அனுசரணையாயுமே வேலைசெய்வான் எந்த வழியிலாகட்டும் எநத சமயங்களிலாகட்டும் பிரஹ்மஞானி மனிதன் என்னும் பதத்தின் வாஸ்தவ அர்த்தத்தைப் புகட்டி எல்லோரையும் நல்வழியிலேயே எண்ணங் கொள்ளச் சொல்வனே ஒழிய குற்றங்கண்ட இடத்தில நிந்திப்பான மொழிகளைச் சொல்லமாட்டான்.

என்சொர்ண மணிகளே! தாரகை ஞானத்தையும் தாரகை சுவேச்சையையும் அடைவதற்கு வந்திருந்தும் நீங்கள் விரோதத்தை விரோதத்தினுலேயே வெல்லலாமென்று மனப்பால் குடியாதேயுங்கள். நாம் எதிர்பார்

க்கும் லோககுருவின் உபதேசங்களுக்கு அதி விரோத மாகும். எரிகிற வீட்டில் மண்ணெண்ணெய் ஊற்றி அணைக் கிறேன் என்று எண்ணுபவனுடைய ஞானமாகுமே ஒழிய வேறில்லை. கெடுதல் என்பதும் மனோ விகாரமே அன்றி வாஸ்தவத்தில் இல்லை. "கேட்டினுமுண்டோருறுதி கிளை ஞரை நீட்டி அளப்பதோர் கோல்" என்றார் நாயனாரும். எப்பொருளிலும் எக்கருமத்திலும் நன்மையென்பதுண்டு. கெடுதலென்பது உருவகையணியாக இருக்குமே ஒழிய வே றில்லை. அதுவும் நம்முன்னேற்றத்திற்கு வேண்டியதே. நம் மிடமிருக்கும் அழுக்கை கொள்ளை கொண்டு நம்மைப் பரிசு த்தனாக்கவந்தனே. தாய் நின்வெங்காரமும் நோய்தீர்க்கும். சேற்றில் விழுந்த குழந்தையை வெந்நீர் விட்டு அழ அழத் தாய் அலம்புவதுபோல் லோகத்திற்கே தாயுந்தந்தையுமாய் விளங்கும் சர்வதயாபரன் அனுபவமென்னும் வெந்நீரால் நமது மலங்களைத் துடைக்கிறார் என்று நீங்கள் உன்னினல் கெடுதல் என்ற எண்ணம் எங்கே இருக்கும்?. ஆகை யால் நிச்சயமான நன்மையையே கடைப்பிடித்தொழுகுவீர் கள் என நம்புகிறேன். நன்மை கடைப்பிடி என்றார் ஔவையாரும்.

ஓம். தத். சத்.

முத்துசாமிஐயர்

சகோதர வாஞ்சை.

அண்ணன் தம்பிகளுக்குள்ளும் அக்காள் தங்கைகளு க்குள்ளும் இருக்கும் அன்புக்கு ஈடாக ஒன்றுமே யில்லை. மூத்தவர்களுக்கு இளையவர்களிடத்தில் உள்ள பிரேமை யும், அப்படியே இளையவர்கட்கு மூத்தவர்களிடத்துள்ள மரியாதையும் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் அண்ணன் தம்பிகள் தான். அவர்கள் ஒருவர்கொருவர் மிகப்பிரியமாயிருந்தார்கள். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி காட்டுக்குப் புறப்பட்ட போது, லக்ஷ்மணனும் கூடவே புறப்பட்டான். அவர்கள் காட்டிலிருந்தபோது, ராமர் தூங்குகையி லெல்லாம் லக்ஷ்மணன் விழித்துக்கொண்டு காவல் காத்து வந்தான்.

ராமனிடத்தில் அவனுக்கு மிகுந்த ஸ்னேகம் உண்டு. ராமர் வேண்டுவதை யெல்லாம் அவன் செய்வான். ஏதாவது நல்ல ஆகாரம் கிடைத்தால் ராமரை நினைத்துக்கொள்வான். ராமருக்குக் கொடாமல் தானே சாப்பிட இஷ்டப்படுவதேயில்லை. காட்டிலிருக்கும் போது ஸீதையும் ராமரும் இருப்பதற்கு வசதியான பர்ணசிரமம் அமைத்துக் கொடுத்தது லக்ஷ்மணனேயாம்.

நான் திரும்பிவரும் வரை ஸீதையை நீயே பாதுகாக்க வேண்டும் என்று லக்ஷ்மணனிடத்தில் ராமர் சொல்லிப் போனபிறகு அச்சொல்லை இம்மி கூடப் பிசகாமல், எவ்வளவு நேர்த்தியாய்ச் செய்து வந்தான்! "ஹா! ஸீதை. ஹா, லக்ஷ்மணா" என்று ராமன் குரலைப்போல பொய்க்குரலெடுத்து ராக்ஷஸன் கதறினதைக் கேட்டதும் தான், ஸீதை மோசம் போனாள். "உடனே ஓடிப்போய் ராமருக்குதவி செய்" என்று ஸீதை ஆக்ஞாபித்த பிறகு தான் லக்ஷ்மணன் அகன்றானே யொழிய அது வரை அவன் அகலவில்லை. அவன் ஒரு க்ஷணமும் ஸீதையைத் தானாகவே விட்டு நீங்கினதில்லை.

ராவணன் ஸீதையை அபகரித்துப்போன பிறகும் அவளை மீட்டுக்கொண்டுவர ராமர் போகுமிட மெல்லாம் லக்ஷ்மணனும் உடன் சென்றான். ராமரை அடிக்கடி தேற்றிப் பொறுமையோடிருக்கும்படி செய்தான்.

ராமனும் அப்படியே லக்ஷ்மணனிடத்தில் பரமப்பிரியம் உள்ளவர். லக்ஷ்மணன் காயப்பட்டுக்கீழே விழுந்து

கிடக்கும்போது ராமரை என்ன தேற்றியும் அவர் தேறுதல் அடையவில்லை. "ஹா! லக்ஷ்மண! நான் காட்டுக்குப் புறப்பட்டபோது என் கூடவே நீயும் புறப்பட்டாய் நீ. இறந்த பிறகு என் உயிர் எனக்குப் பெரிதல்ல. நானும் உயிர் துறந்து உன் கூடவே வருவேன்" என்றார். தேவர்கள் வந்து லக்ஷ்மணனுடைய காயங்களை ஆற்றி அவனுக்கு உயிரைக் கொடுத்தவுடன், ராமனுக்கு எவ்வளவு சந்தோஷம்! உடனே லக்ஷ்மணனைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

நம் ஸ்நேகிதர்கள் எத்தனையோ பேர்கள் எல்லாத் தேசங்களிலும் இருந்த போதிலும் அவர்களில் ஒருவரும் நம் சகோதரருக்கு ஈடாக மாட்டார்.

கடைசிக்காலம் வரை லக்ஷ்மணனும் அப்படியே விசுவாசமுள்ளவனாயிருந்தான். தன் சொந்த உயிரையும் பெரிதாக நினைக்கவில்லை. தன் தமயனாருடைய கண்யதையையே பெரிதும் பாராட்டினான். ராமன் ஒரு சமயம் காலனோடு தனித்துப் பேசுவதாகச் சொல்லியிருந்தார். அச்சமயம் நடுவே ஒருவரும் வரக்கூடாதென்றும் வரும் பக்ஷத்தில் அவர் கொல்லப்படுவாரென்றும் விதித்தார். அப்போது லக்ஷ்மணனைக் காவலாய் வைத்து விட்டார்.

ராமனும் காலனும் பேசிக்கொண்டிருக்கும்போது துர்வாஸ மஹரிஷி அவ்விடத்தற்கு வந்து "அரசனைப் பார்க்கவேண்டும்" என்றார். அப்போது லக்ஷ்மணன் அரசன் வேலையாயிருக்கிறார். தாங்கள் சற்று தாமதிக்கவேண்டும் இப்போது உள்ளே செல்லக்கூடாது என்றான். துர்வாஸருக்கு அடங்காக் கோபம் வந்து விட்டது. "நான் வந்திருக்கிறேன் என்பதை உடனே தெரிவிக்கா விட்டால் உன்னையும் உன்தம்பி தமையன்களையும், உங்கள் ராஜியத்தையும் சபித்து விடுவேன்" என்றார். அப்போது லக்ஷ்மணன் நினைத்தான். என் சகோதரர்களும் ராஜியமும் அழி

வதைப்பார்க்கிலும் நான் இறப்பது சிலாக்கியம் என்று கூறினன். ஆகையால் உடனே ராமரிடம் போய்த் துருவாசர் வரவைச் சொன்னன். தான் உள்ளே போனுல் நிச்சயம் கொல்லப்படுவான் என்பது லக்ஷ்மணனுக்குத் தெரியாததல்ல. ராமரும் விசனப்பட்டார். என்றாலும் காலனுக்குக் கொடுத்த வாக்கை அவர் தவறக்கூடாது. ஆகையால் லக்ஷ்மணன் உயிர் துறக்கவேண்டியது தான் என்று கட்டளை யிட்டார். உடனே லக்ஷ்மணன் நதிக் கரைக்குப்போய் ஜபம் செய்து கொண்டிருந்த காலத்தில் தேவர்கள் அவன் ஆவியை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். ராமனிடத்துள்ள மிகுந்த பிரேமையாலல்லவோ லக்ஷ்மணன் இறந்தான். பிறகு ராமனும் இறந்து போனர். இருவரும் ஸ்வர்க்கமடைந்தார்கள்.

பிள்ளைகளே! ராம லக்ஷ்மணர்களுடைய சகோதர வாஞ்சை எவ்வளவென்று பாருங்கள். அப்படியே தான் நீங்கள் ஒருவர்க்கொருவர் நேசமாயிருக்கவேண்டும்.

தகப்பனர் இறந்த பிறகு மூத்த சகோதரன் தான் பிதாவின் ஸ்தானம். சிறுபிள்ளைகள் எல்லோருக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மூத்தவன் இளையவர்களை எப்போதும் அன்புடன் ஆதரிக்கவேண்டும்.

இது விஷயமாய்ப் பஞ்சபாண்டவர்களின் கதையும் ஒன்று உள்ளது. தர்மபுத்திரர்க்கு (யுதிஷ்டிரருக்கு) பீமன் அர்ஜுனன் என்பவர்கள் தம்பிமார். அவர்கள் தங்களுக்கு மூத்தவரான தர்மபுத்திரரையே அதிபதியாகக் கருதி வந்தார்கள். அப்போது துரியோதனன், அவர்களைப் பார்த்து, யுதிஷ்டிரர் சொல்லைக் கேளாதீர்கள் என்றான். அவர்கள் என்ன பதில் சொன்னர்கள்? "அவரால் தான் நாங்கள் ஏகதேசமாவது நல்லவர்களாயிருக்கிறோம். எங்கள் உடல், பொருள் ஆவி எல்லாம் அவரைச்சேர்ந்தனவே யன்றி வேறல்ல" என்றார்கள்.

மிகக்கெட்டவனான துரியோதனன் தன் தகப்பனார் திருதராஷ்டிரனைக் கொண்டு தர்மபுத்திரரைக் காட்டுக்கு விரட்டச் செய்தானே, அச்சமயம் பாண்டு புத்திரர்களில் மற்றவர்கள் என்ன செய்தார்கள்? தாமும் கூடவே காட்டுக்குச் சென்றார்கள். தர்மபுத்திரர் மட்டும் காட்டுக்குப் போகட்டும் நாம் சுகமாயிருக்கலாமென்று ஒருவரும் எண்ணவில்லை. தர்மபுத்திரருக்காக அவர்கள் யுத்தம் செய்தார்கள். அவருக்கு ராஜ்யத்தை வாங்கிக்கொடுத்தார்கள். யுதிஷ்டிரரைத் தேவர்கள் ஸ்வர்க்கத்துக்கு அழைத்துச்சென்றபோது அவர் சொன்னதென்ன? அவர் அவ்வுலத்தில் எவ்வளவோ சௌக்கிய மடையலாம் என்று தேவர்கள பலமுறை சொன்னபோதிலும் அவருக்கு அது திருப்திபடவில்லை. அவர் அங்கே தம் மனைவியையும், சகோதரர்களையும் தேடிப்பார்த்துக் காணாமையால், அங்குள்ள தேவர்களையும் ராஜரிஷிகளையும் நமஸ்கரித்துப் பின் வருமாறு சொன்னார். "என் தம்பிமார்களும், என் மனைவியும் எங்கிருக்கிறார்களோ அதுதான் எனக்குச் சொர்க்கம். அது சுகமாயிருந்தாலும் சரி, துக்கமாயிருந்தாலும் சரி, அவர்களிடத்திற்கே போக விரும்புகிறேன்." என்றார்.

அப்போது ஒரு தேவதூதன் யுதிஷ்டிரரைச் சொர்க்கலோகத்தினின் றழைத்துக்கொண்டு, இருளடைந்ததும் துர்நாற்றமுள்ள பூச்சி புழுக்கள் நிறைந்ததுமான வேறொருலோகத்திற் சேர்த்தான். அங்கே கோரரூபங்கள் நிறைந்திருந்தன. தரை யெல்லாம் காடுமுரடாகவும் முட்கள் நிறைந்ததாகவும் காணப்பட்டது.

அப்போது யுதிஷ்டிரர் தூதனைப் பார்த்து இதென்ன இடம்? என்னை ஏன் இங்கு அழைத்து வருகிறாய்? என் தம்பிமார் இங்கிருக்க மாட்டார்களே! என்றார். இது வரைதான் உங்களைக் கொண்டு சேர்க்கும்படி எனக்கு தேவர்களுடைய உத்தரவு. ஹே! ராஜா! உங்களுக்குச் சிரமமாயிருக்கும் பக்ஷத்தில் என்னுடன் திரும்பி

வந்து விடலாம் என்று சொன்னான். யுதிஷ்டிரர் தன் தம்பிமாரைத் தேடிப்பார்த்துக் காணாததால் விசனமுற்றுத் திரும்பும் வேளையில், "ஓ! அரசே! சற்று இருங்கள் தாங்கள் இங்கிருப்பது எங்களுக்குச் சுகத்தைத் தருகிறது" என்ற அழுகைக் குரல்கள் நாலா பக்கங்களிலிருந்தும் வந்தன. யுதிஷ்டிரர் மிகக் கருணையுள்ளவராகையால் அப்படியே அமைதியாய் நின்றார். அவருக்கு எல்லாம் பழகின குரல்களாகத் தோன்றின. "நீங்கள் யார்? ஏன் இங்கிருக்கிறீர்கள்?" என்றார்.

"நான் கர்ணன்". "நான் பீமன்" "நான் அர்ஜுனன்" நான் நகுலன்; நான் திரௌபதி" என்ற தீன சுரமுள்ள சத்தங்கள் கேட்டன. யுதிஷ்டிரருக்கு அத்தேவதூதனிடத்தில் கோபம் வந்து விட்டது. "நீ தேவர்களிடம் திரும்பிப் போ. அவர்களிருக்கும் இடத்திற்கு இனி நான் வரமாட்டேன் என்பதைச் சொல. நான் இதே இடத்திலிருந்து என் ஸஹோதரர்களைத் தேற்றிக் கொண்டிருப்பேன் என்று அவர்களிடம் போய்ச் சொல்" என்றார்.

அப்போது திடீரென்று ஒரு பெரும் சோதி உண்டாயிற்று, இருள் ஒழிந்தது. கோரமான தோற்றங்களும் நாற்றங்களும் ஒழிந்தன. நல்ல மணமும் சீதளமான காற்றும் வீசின. முட் பாதை முழுவதும் புஷ்பத்தலஃன ரஸ்தாவாயிற்று.

"இந்த கோரமான இடத்தில் என் மனைவியும் சகோதரர்களும் வந்திருப்பானேன்?" என்று பக்கத்திலிருந்த தேவர்களை யுதிஷ்டிரர் கேட்டார். தேவர்களும் பின் வருமாறுபதில் சொன்னார்கள். "அநேகர் தாம் முன் செய்த தீவினைகளுக்காகத் துக்ககரமான இவ்விடங்களில் சொற்பகாலம் கழிக்க வேண்டியது அவசியம். நீ இவைகளை யெல்லாம் தாண்டியாயிற்று. ஆனாலும் இவ்விருட்டு உலகத்தில் உன் தம்பிமாரோடு இருக்கப் பிரியப்பட்டாய். இப்

பொழுதாவது சுகமாயிரு. உன் தம்பிமார்கள் உண்மையில் இங்கே இல்லை. உன்னைப் பரிசோதிக்க நாங்கள் ஏற்படுத்திய ஓர் கனவு இது.'' யுதிஷ்டிரரும் தேவர்களுடன் சொர்க்கலோகத்திற்குப் போனார். ஏனெனில் அன்பின் பெருமையே பெருமை. அது மரணத்தையும் பாபத்தையும் ஜயிக்க வல்லது. அண்ணன் தம்பிகள் பூலோகத்தில் ஒருவர்க்கொருவர் எவ்வளவு நேசமாயிருந்தார்களோ அவ்வளவு நேசமாய் எல்லோரும் சொர்க்கத்திலும் போய்ச் சேர்ந்து கொண்டார்கள்.

பி. எஸ். ராமசுப்பையர்.

சாமாலாலின் காக்ஷி.

சாமாலால் பிருந்தா வனத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தில் வசித்துக் கொண்டிருந்தான். அவன் தகப்பன் மிகுந்த செல்வவந்தனல்ல. அவனுக்குள்ள ஆஸ்தியெல்லாம் சொற்ப பூஸ்திதியே. இதைக்கொண்டு அவன் நெற்றி நீர் நிலத்தில் வடியப்பாடு பட்டுத் தன் சிறு குடும்பத்தைக் காத்து வந்தான். சாமா குக்கிராமத்தில் வசித்து வந்ததோர் பையனை என்று சொன்னோம். அதனால் அவனை ஓர் அநாகரீகன் என்று சொல்வது சற்றும் பொருந்தாது. சாமாவின் பெற்றோர் மிகுந்த தேகப்பிரயாசிகள் தான். சூது வாதற்றவர்கள். இவர்களுடைய சொற்ப வரும்படியைக் கொண்டு சாமாவைப் பள்ளிக்கு அனுப்ப இவர்களால் சற்றும் முடியவில்லை. என்றாலும் சாமாவைப் படியாதவன் என்று சொல்வது சரியாகாது. ஏனெனில் சாமாவின் குடும்பத்தின் பழைய காலத்தில் தர்மம் எது? அதர்மம் எது? என்று விசாரித்தறியக் கூடிய ஓர் உள்

உணர்ச்சி இன்னும் ஊடாடி வந்தது. அவனது பெற்றோர்களிடத்தும் பயிற்சியால் அல்லது சுபாவமாகவே உள்ள ஒரு நற்குணமும் நாகரீகமும் நிறைந்திருந்தது அவர்கள தங்கள் காரியங்களை அவ்வக்காலங்களில் செய்து முடித்து வந்தனர். வேலை செய்கிறதற்கு ஒரு காலமும், பூஜை செய்ய ஒரு காலமும், ஓய்வாயிருக்க ஓர் காலமும் உண்டென்று நன்கு அறிந்தவர்கள். ஆதலின் ஜீவனமயிருக்க கஷ்டமுள்ளதாயிருந்த போதிலும், அதைப்பற்றி அக்குடும்பத்தினர் ஸ்தூல சரீரத்திற்கு அவசியமான ஆகாரத்தையே நினைந்து வருந்தா வண்ணம நற்சிந்தனையில அவர்கள் மனதைத் திருப்பி வந்தனர்.

வயல்வெளிகளில் செய்ய வேண்டிய வேலை எவ்வளவு அவசரமாயிருந்த போதிலும், ஈசுவர பூஜை நைவேத்தியாதிகளைச் சற்றும் அலக்ஷியம் செய்வதில்லை. வேலை செய்த பிறகு கடைசியில் சற்று நேரம் பக்கத்திலுள்ள ஓர் ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து சந்தோஷமாக யாவரோடும் சற்று பேசுவது வழக்கம். சிற்சில சமயங்களில் அதில் மூதாதோராயிருப்பவர் இரண்டொரு கதை சொல்வதுண்டு. அல்லது ஈசுவர பக்தி, தேச பக்தி அளிக்கக் கூடிய இரண்டொரு பாட்டுகள் பாடுவதுண்டு. சாமாவின் தகப்பனுக்கு பாரத தேசத்தைப் பற்றியும், அதன் முதல்வராகிய பாரத மனிதர்களைப் பற்றியும் அநேகம் பாட்டுகள் வெகு இன்பமாகப் பாடத் தெரியும். சாமாவும் அவற்றில் சிலவற்றை வெகு அழகாய்ப் பாடுவான். ஆதலால் சாமாவுக்குத் தன் தேசத்தின் பூர்வ சரிதமும், தற்கால சரித்திரமும் நன்றாய்த் தெரியும். நமக்குத் தெரிந்ததை விட இவ்விஷயத்தில் கிராமவாசிகள் மிக்க அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் மரத்தடியில் கூட்டம் கூட்டுவதும் அவர்களுடைய தீர்மானங்களும் உண்மையில், சீமைச் சாராயங்களைக் கணக்கின்றிக் குடிக்கும் பெரிய ஆசாமிகள் நிறைந்த "கிளப்" கூட்டத்தை விட மிக்க விசேஷிக்கத்

தக்கதாகவே யிருந்தது. ஆகலின் சாமா ஓர் முட்டா ளல்ல. அவனுக்கு வயது பதினறே. ஏழை வயிற்றிற் பிற ந்ததால் இவனுடைய ஆகாரமும் தகுந்த அளவு போஷிக்க க்கூடியதாக இல்லை. ஆயினும் இவன் மிகுந்த யுக்திசாலி, விஷயங்களை ஆராய்ந்து பார்த்து அவைகளை அறிந்து சொ ள்வதில் மிக்கத் திறமையுள்ளவன். பிறர் சொல்வதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதிலும் நிகரற்றவன். சாமா வின் தகப்பனருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆயி னும் தன் பையனுக்குத் தேச பாஷையிலாவது கொஞ்சம் எப்படியாவது பயிற்சி செய்விக்க வேண்டுமென்ற அவா அவருக்கு இருந்தது.

இதற்கேற்ப வாரத்திற்குச் சில முறைகள் அவனைக் கிராமத்தில் உள்ள ஓர் உபாத்தியாயர் வசம் அனுப்பி வந் தார். இதனால் தன் வேலை கொஞ்சம் கெட்டுப் போவது அவருக்குத் தெரியும். இருந்தாலும் வாசிக்கத் தெரிவதா ல் உண்டாகும் விசால புத்தியும், நோக்கமும், அக்கஷ்டத் திற்குப் பன்மடங்கதிகமாகவே ஈடு செய்யும் என்று எண்ணி ஞர்.

பட்டணத்திலேயே வசித்துவருகிற இக்காலத்திய சிறுவர்களுக்குச் சாமாவின் வீடு கொஞ்சமும் பிடியாது. அது மண்சுவற்றேடு கூடிய ஓர் கூரை வீடு. ஆனல் பட்ட ணத்திலுள்ள அநேக வீடுகளைக் காட்டிலும் அது மிக்க சுத்தமாகவே யிருந்தது. சாமாவின் தாயார் வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதில் கை தேர்ந்தவள். ஒரு ராஜ மாளிகையைவிட இதுவே எனக்கு மிக்க விருப்ப த்தை அளிக்கக்கூடியதாயிருந்தது. சாமாவுக்கு இப் படிப்பட்ட பெற்றோர்களும், வீடும் கிடைத்தது அதிரு ஷ்டகரமாகவே சொல்லவேண்டும். கஷ்டப்பட்டு வயலில் வேலை செய்ய வேண்டியிருப்பதும் ஓர் துரதிருஷ்டம் அல்ல. அவன் பாடுபட்டு வேலை செய்துவந்ததால் அவன் நோயற்றவனுகவும் திடகாத்திரனுகவும் இருந்தான். அத

னால் பஞ்சகாலத்தில் சற்று குறைந்த ஆகாரத்தை உண்ட போதிலும் அவன் சரீரம் சற்றும் தளராதிருந்தது.

என் கதை ஆரம்பிக்கும் பொழுது சாமா, பிருந்தாவனத்திற்கும் மதுராவுக்கும் போகிற ரஸ்தாவின் பக்கத்திலுள்ள ஒரு தோப்பில் உட்கார்ந்திருந்தான். தோப்பு மரமடர்ந்தது. அவனைச் சுற்றிலும் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சில கன்றுகளும் கூடநின்று கொண்டிருந்தன. சாமா சிறுவயது முதல் மாடு மேய்ப்பது வழக்கம். மாடு மேய்ப்பதில் அவனுக்கு மிக்கப் பிரீதியுண்டு. அதனால் பெரியவனானபிறகும் சிற்சில சந்தர்ப்பங்களில் மாடு மேய்க்கக் குதூகலத்துடன் தோப்புக்கு வருவதுண்டு. சிற்சில சமயங்களில் ஏதேனும் ஒரு புஸ்தகம் எடுத்துப் போவதுண்டு. மிருதுவாய்ப் பஞ்சுபோன்ற பசும்புற்றரையில் முகத்தை வைத்துப்படுப்பதும் அங்கு ஊர்ந்து செல்லும் சின்னஞ்சிறு எறும்புகளைக் கவனித்தலும் இவனுக்கு மிக்க பிரீதியை அளிக்கும். தோப்பில் சஞ்சரிக்கும் ஜந்துக்களுக்கு இவனை நன்கு தெரியும். இவனைக்கண்டதும் அங்குள்ள அன்றிற் கூட்டங்களெல்லாம் திரண்டோடிவரும். அவற்றிற்குச் சமீபத்திலுள்ள நிலங்களிலிருந்து தானியமணிகளை அவன் கொண்டு வந்து இறைப்பது வழக்கம். ஆதலின் இவனுக்கும் இச்சிறு ஜீவஜந்துக்களுக்கும் ஓர் அன்பு உண்டாயிற்று என்று சொல்வது மிகை ஆகாது.

அல்லது மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டு பசுக்கள் மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென தூரத்தில் ஆகாயம் வரை அளாவுகின்ற பிருந்தாவனத்தின் அழகிய கோபுரங்களைக் கண்ணுற்றுத் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்வான், "ஆகா! இது ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருக்கோவில் அன்றோ! சர்வ ஜீவஜந்துக்களுக்கும் ஹே! தயாநிதே பசுக்களே! மேய்க்கும் ஹே! கோபாலா! என்று இவ்வாறு பலவாறு துதித்துக்கொண்டிருந்தான்.

(தொடரும்) பியர்ஸ்.

வந்தனம்.

(120-ம் பக்கத்தொடர்ச்சி)

மாதாஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்கள் நியூ இந்தியாவில் எழுதுகிறார்கள்.

அடியேன்பால் தம்முடைய அன்பார்ந்த எண்ணங்களைச் செலுத்தவும், அன்பார்ந்த வார்த்தைகளைச் சொல்லவும், அன்புநிறைந்த செய்கைகளைச்செய்யவும உலகம்முழுவதிலும் உள்ள அடியேனது சிநேகிதர்களும் சகாக்களும் தஙகளுடைய அன்பினால் இத்தினத்தை நியமித்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள பலநாடுகளிலிருந்தும் எனக்குத் தந்திகள்வருகின்றன. பற்பல நாடுகளில் என் ஜன்மதினத்தைக் கொண்டாடுகிறார்கள். இந்நாட்டிலோ ஏழைகளுக்கு அன்னமிட்டுக் கொடைகளும் கொடுக்கிறார்கள். இவ்வளவு அன்பையும், இவ்வளவு நட்பையும் செலுத்துவோர்க்கு யாது கைம்மாறு யான் செய்யவல்லேன்? என் ஹிருதயபூர்வமாக என்னுடைய வந்தனத்தைச் செலுத்துவதோடு ஆரிய வம்சத்தாரின் தாய் நாடாகவும், அவர்களுக்கு முன் திராவிட வம்சத்தாரின் தாய் நாடாகவும், அப்பால் முசல்மான் ஜாதியாரின் தாய் பூமியாவும் இருப்பதும், இம்மூன்று வம்சத்தாரின் நாகரீகத்தின் ஒன்றிய சேர்க்கையால் சிறப்பைப் பெற்றிருப்பதுமாகிய நம் மாதிருபூமியின் சேவையை என் பூரண சக்தியுடன செய்யககடவேன் என்று மறுபடியும் கங்கணங்கட்டிக் கொள்ளுகிறேன். ஒவ்வொருவரும் தததமக்கு எது சரியான வழியென்று அறிகின்றனரோ அவ்வழியில் உதவவேண்டியது கடனும். ஆதிகாலத்தில் அவதரித்த பகவான் கூறியுள்ள வார்த்தையை அவலம்பித்து நமது பாரத மாதாவும் அடியில் கண்டபடி கூறுகிறாள் "எனது மக்கள் பற்பல வழிகளில் எனக்கு சேவை செய்கிறார்கள். எவ்வழியில் சேவை செய்தாலும் நான் அவர்களை ஆசிர்வதிக்கிறேன். எல்லா வழிகளும் என்னுடைய வழிகளே" நாம் எல்லோரும் நோக்கிச்செல்லும் உத்தேசமானது யாவருக்கும் பொதுவாகும். அதோ! இந்திய

பூர்ணசந்திரோதயம்.

சுயராஜ்யம் பலர் நினைப்பதைவிட சீக்கிர காலத்தில் அவ்வுத்தேசமானது கிட்டும் தருணமேயிருக்கிறது. என்னுடன் ஒத்துழைப்பவருக்கும், சகபாடிகளுக்கும், சிநேகிதர்களுக்கும், தேசபக்தர்களுக்கும் என்னுடைய 74ம் வருஷத்துவக்கத்தில் கூறும் வார்த்தை பொறுமையென்றுல.

"வந்தே மாதரம்."

அன்னிபெஸண்டு.

அன்னிபெஸண்டம்மையின் 73ஆவது ஆண்டு நிறைவுவிழா.

இச்சுபதினமானது மதுரையில் 1—10—1920ல் விக்டோரியா எட்வர்டு ஹாலில் மாலை 5-30க்குக் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் மதுரை ஹைக்கோர்ட் வக்கீல் வி. ராமசாஸ்திரியர் அவர்கள் அக்கிராசன மலங்கரித்தனர். அம்மையவர்களுடைய அபரிமிதமான லோகோத்தரமான கைங்கரியங்களை யெடுத்துக் கூறிய பின்னர் வக்கீல் ஆர் ரெங்கசாமி ஐயர் அவர்கள் அம்மையவர்களின் நற்கருமங்களனைத்தும் உலகம் முழுவதிற்கும் பொதுவானவைகள் என்றும், இந்தியாவுக்கென்று அவர்கள் உழைப்பது கூட இந்தியாவும் உலகமும் ஒருங்கே பயன் பெறுவதற்காகவும் என்று கூறினார். பின்னர் ரெங்கூன் எம். சுப்பிரமணிய ஐயர் ஆங்கிலத்தில் அம்மாளவர்கள் சிறந்த கர்மயோகியென்றும், கர்மயோகியின் தன்மையானது வெறும் பக்தன் அல்லது ஞானயோகியின் தன்மையைக்காட்டிலும் வேறுபட்டது என்றும், கர்மயோகியானவன் உலகத்தாருடைய பற்பல அபிமானங்களில் தாக்கி மற்றவர்களுடன் முரண்படுவது இயல்பென்றும் விளக்கினார். அப்பால் ஸ்ரீ ஆர் எஸ் நாராயணசாமி ஐயர் அவர்களும் ஸ்ரீ வி. விசுவநாதய்யரும் சிற்சில வார்த்தைகளைச் சமயேற்பக் கூறினார்கள். அம்மையவர்களுக்கு நீண்ட ஆயுளைப் பிரார்த்தித்து அக்கிராசனரால் தந்தி கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் ரெங்கூன் எம். சுப்பிரமணிய ஐயர் அத்தியாத்ம வாழ்வும் அதை நடத்தும் முறையும் என்ற அரிய விஷயத்தைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சிறந்த பிரசங்கம் செய்தனர். அவ்விரவு 8 மணிக்குச் சபை முற்றுப்பெற்றது.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

1881-வருஷம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ரா

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்த் தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சமபன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷகாலமாய் உபயோகப் பேருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மேனிவனப்பையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்திரையின் விலை ரூ. 1

வைத்ய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்க நிக்கிரக

ஔஷதாலயம்

45, மேலக் கோபுர வீதி

மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்பி 1-க்கு விலை ரூ. 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனாமாய் அனுப்புகிறோம்

ஜகப் பிரசித்திபெற்ற
ஜிண்டான் மாத்திரை

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜிண்டானை ஐயம்பாதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளூயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெ- [illegible] சாசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ. 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

லோகல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சுகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. லோகல் குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாய்லெட்டுகள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், [illegible], [illegible] ஊதுவத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. [illegible] கிருஷ்ண நாயுடு,

ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்ட் கோ, மேலக்கோபுர வீதி மதுரை